|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 13 சோபகிருது - குரோதி ஹூ பங்குனி - சித்திரை மீ ஏப்ரல் 2024 இதழ் 4

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில்
வெளியிடுவோர் :
**ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்**



ரகுபதி ராகவ ராஜா ராம்
பதித பாவன ஸீதா ராம்

ஸுந்தர விக்ரஹ மேக
ஷ்யாம் கங்கா துலஸீ
சாலக்ராம்

பத்ர கிரீஷ்வர ஸீதா ராம்
பக்தஜனப்ரிய ஸீதா ராம்

ஜானகீ ரமண ஸீதா ராம்
ஜய ஜய ராகவ ஸீதா ராம்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

**பங்குனி - சித்திரை 2024**

**மலர் 13 ஏப்ரல் 2024 இதழ் 4**


## பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| தெய்வத்தின் குரல் | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 10 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 13 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் | 19 |
| ராஜ தரங்கிணி | 20 |
| பிற்காலத்துத் தமிழ் நூல்களில் அத்வைதம் | 23 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 25 |
| சித்திரை மாத விசேஷ தினங்கள் | 31 |
| நாம ராமாயணம் | 32 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 34 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 37 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 39 |
| ஆழ்வார்கள் சரித்திரம் | 42 |
| மகாபாரத சுருக்கம் | 44 |
| முக ஸாரம் | 47 |





भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

**கௌரவ தலைமை ஆசிரியர் :**

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

**வெளியிடுவோர் :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

***ப்ரோவ பாரமா ரகுராமா கீர்த்தனை***

*ரகுராமனே! புவனங்களனைத்திலும் நீயே நிரம்பியிருந்தும்*
*இந்த த்யாகராஜனைக் காப்பது ஒரு பாரமா? ஸ்ரீ வாஸுதேவ அண்ட கோடிகளை*
*உன் வயிற்றுள் நீ அடக்கவில்லையா? என்னைக் காப்பது பாரமா?*
*ஒரு முறை தேவர்களுக்காக மனமிரங்கி மந்தரகிரியையும் மற்றொரு முறை*
*கோபியருக்காக கோவர்தன கிரியையும் தாங்க வில்லையா?*
*என்னைக் காப்பது பாரமா?*

*ராம நினு நம்மி நவாரமு கீர்த்தனை*

*உலகத்தவர் மனம் கவர் ராமா நாங்கள் உன்னை நம்பியவர்கள். உத்தம குணம் நிரம்பியவனே, பாமரருக்கு எட்டாதவனே, தயை பொழியும் கடைக்கண் பார்வை உடையவனே, மங்கள ஸ்வரூபனே, முனிவர் இதயமென்னும் தாமரையை வட்டமிடும் வண்டு போன்றவனே!*

*நீ வருவதற்கு தாமதம் ஏன் ? குணவானே ! தசரத மன்னனின் உள்ளத்திற்கு மகிழ்ச்சி அளிப்பவனே திருமகளை உகப்பவனே என் பக்கத்தில் காக்ஷி அளிப்பாயாக. முக்கண்ணனின் இதயத்தை இருப்பிடம் கொண்டவனே இன்னும் பாராமுகமேன்! எம்மைக் காக்க உனக்கு ஏன் மனம் வரவில்லை?*

*நீயே எனக்குக் கதி. நான் வேறு ஒன்றையும் அறியேன். என் எதிரில் தோன்றி உன் பாத பக்தியை அருள்வாய். மன்மதனை எரித்த பரமசிவன் வணங்கும் தேவனே உன் திருவடி சேவையின் பலனே! எம்மைக் காக்கலாகாதா? எளியோரைப் பாலிப்பவனே தேவர்களின் தலைவனே ! முனிவரின் ஆதாரமே! என்னைக் காக்க மாட்டாயா?*

*கருமுகில் வண்ணனே! மாந்தருக்கு ஆதாரமானவனே ! பாப கூட்டமென்னும் மேகக் கூட்டத்தை கலைக்கும் பெரும் காற்றே! த்யாகராஜனின் சித்தமிசை குடி கொண்டவனே! உழன்றும் களைப்பெய்தி உன்னை நம்புவதற்கும் முடியாதவனாகி நான் விசாரப்படுவது உனக்கு மரியாதையில்லை.*

# ஆசிரியர் பக்கம்

*நமது ஸனாதன தர்ம சாஸ்த்ரத்தின் ஒரு முக்யமான் அம்சமாக 'கர்ம சித்தாந்தம் உள்ளது. வர்ணாஸ்ரம தர்மக் கொள்கை போல் இதற்கும் பலமான எதிர்ப்புகள் உண்டு. இருப்பினும் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது இதன் உறுதி தெரிகிறது. ஆழ்ந்த சிந்தனை அவஸ்யம். அவ்வளவுதான். பார்க்கும் உலகில் இவ்வளவு எற்றத்தாழ்வுகள், நல்லவன் வீழ்ச்சியும் அல்லவன் ஏற்றமும் காணும் போது நமக்கே ஓர் ஐயம் வருகிறது. என்ன இப்படி? கடவுள் இவ்வளவு பாரபட்சமானவரா? கொடூரமானவரா? ''பாப கர்மத்தை செய்பவன் பாபத்தையும் புண்ய கர்மத்தைச் செய்பவன் புண்யத்தையும் அடைகிறான்'' என்று உபநிஷதமும் கூறுகிறது.*

*சரி நல்லவன் வீழ்ச்சியை எப்படி புரிந்து கொள்கிறது. இதற்கு கடவுள் காரணமெனின் அப்படிப்பட்ட கடவுள் வேண்டவே வேண்டாம்.' கர்ம சித்தாந்தம் தவிர இதற்கு விளக்கம் தர இயலாது. மற்ற மதங்களின் மௌனத்தில் நமது 'கர்ம சித்தாந்தம்' உரக்க கோஷிக்கிறது. இப்போது நடந்த சில விஷயங்களைப் பார்க்கும் போது இதன் ஆழம் புரியும்.*

*ஒரு பெரிய பரோபகாரியின் மகன் சட்லெட்ஜ் ஆற்றில் மூழ்கி இறந்த அவலம் எல்லோர் மனதையும் நோகடித்தது. இவருக்கா இந்த சோகம் என்று அனைவரும் கண்ணீர் விட்டனர். அகால மரணம் என்றும் கவலைப்பட்டோம். இது ஒரு புறம் இருக்க கடார் நாட்டில் 8 கடற்படை வீரர்களுக்கு மரண தண்டனை தரப்பட்டது. இருப்பதோ அயல் நாடு. தண்டனையோ மரணம். மாற்ற முடியாத தண்டனை.*

*இருப்பினும் நமது அரசின் ராஜ தந்த்ரத்தால் அனைவரும் விடுதலையானார்கள். மற்றொரு சம்பவம். போன வருடம் சுரங்கத்தில் பரிதவித்த ஐம்பது பேர் ஒருவரும் பலியாகாமல் பத்திரமாக மீட்கப்பட்டனர். [அனேகமாக மரணம் நிச்சயம் என்று இருந்த போது]. ஒரு பக்கம் சிரஞ்சீவியாக இருக்க வேண்டியவர் அகால மரணம் எய்துகிறார். மரணம் நிச்சயம் என்று இருப்பவர்கள் உயிருடன் வருகிறார்கள். புரியாத புதிர்! கர்ம சித்தாந்தத்தை விட இதற்குப் பதில் யார் கூறமுடியும்.*

ஸஞ்சித கர்மாவின் பலனை ப்ராரப்த கர்மாவில் அனுபவிக்கிறோம் என்பதே உண்மை. எனவே தான் கர்மாவிற்கு அடுத்த ஜன்மாவிற்கு இப்போதே நல்லது செய் என்று கூறுகிறது சாஸ்த்ரம். ப்ரத்யக்ஷ பலனை இப்போதே பார்க்கா விட்டாலும் ஊகத்தில் சரியாக வருகிறது. ஒரு ஸ்லோகம் நினைவிற்கு வருகிறது.

*ந அகாலோ ம்ரியதே ஜந்து: வித்த: சதசைரபி*
*குஸாக்ரேண ஸம்ஸ்ப்ருஷ்ட: ந ஜீவதி ப்ராப்த காலே*

அக்காலத்தில் எந்த ஜந்துவும் நூறு அம்புகளினால் அடிக்கப்பட்டு மரிப்பதில்லை. ஆனால் புல் நுனியாலா அடிக்கப்பட்டு காலத்தில் மரணம் எய்தும்.

எனவே மேற்கூறிய சம்பவங்களாலும் இன்னும் பல ஸம்பவங்களாலும் இந்த கர்ம ஸித்தாந்தம் பலப்படுகிறது. மிக விசித்ரமாகவும் புரியாத புதிராகவும் உள்ளது. ஆனால் தர்க்க ரீதியாக உள்ளது. நமகுத் தேவை சரியான பார்வை, யோசனை.

குரோதி வருடம் பிறக்கிறது. அனைவரும் நலம் பெறவும் கலி கெடவும் வையம் துயர் தீரவும் நல்ல காலம் பிறக்கவும் கடவுளைப் ப்ரார்த்திக்கிறோம். அடுத்த பிறவியில் நல்லது நடக்க இப்பிறவியில் நம்மால் முடிந்த நல்லதைச் செய்வோம். ஸ்ரேயோ பூயாத் ஸகல ஜனானாம் [ஆன்மீகவழியில் அனைவரும் இருக்க] என்று ப்ரார்த்தித்து இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற் பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

*ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர !*




# இனிய தமிழ் புத்தாண்டு
# "குரோதி"
# நல்வாழ்த்துக்கள்



# தெய்வத்தின் குரல்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

## அரசு புரிய வேண்டிய மத போஷணை
## அதனால் அரசு பெறும் லாபம்



பிரஜைகளின் உள்ள உயர்வுக்கு உதவுவதில் அரசாங்கத்திற்குப் பங்கு உண்டு என்ற காரணத்தோடு, மத வளர்ச்சியின் வழியே ஏற்படும் உள்ளத்தின் உயர்வால் அரசாங்கத்திற்கே நேராக ஒரு லாபமும் உண்டு என்பதை ஓர் அரசாங்கம் எல்லா மதங்களுக்கும் ஆதரவு தந்துதவ வேண்டுமென்பதற்கு ஓர் உபகாரணமாக (துணைக்காரணமாக) க் காட்ட விரும்புகிறோம். தற்போது ஒரு நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி ஏராளமான குற்றங்கள் நடைபெறுவதால் நீதிமன்றங்கள், உள்நாட்டுப் பாதுக்காப்பான போலீஸ் ஆகியவற்றுக்கு அரசாங்கம் ஏராளமாகச் செலவழிக்க வேண்டியுள்ளது. அதோடு சட்டத்தையும் ஒழுங்கையும் காக்கும் பணி மிகக் கடினமானதாகவும், அரசாங்கத்திற்கு மிகுந்த மனச்சுமையேற்றுவதாகவும் உள்ளது. இச்செலவில் ஒரு சிறு பங்கினை மதங்களின் போஷாணைக்கு ஆக்கி, எல்லா மதஸ்தர்களுக்கும் ஆலயத் திருப்பணி செய்வது, எல்லா மத ஸ்தாபனங்களுக்கும் திரவிய காணிக்கையளிப்பது, ஸத்ஸங்கங்களுக்கு மானியமளிப்பது, ஸத்துக்களான யாவருக்கும் சன்மானமளிப்பது என முற்கால மன்னர்கள் செய்தாற் போல் செய்து மதாபிமானம் வளர்வதற்காகச் செலவிட்டாலே போதும், அதன் வழியே மக்களின் உள்ளம் உயர்ந்து பண்பட்டு, முற்காலத்திலிருந்தாற்போலவே குற்றங்களும் வெகுவாகக் குறைந்துவிடும். எனவே நீதித்துறை, போலீஸ் துறை ஆகியவற்றின் தேவையும் வெகுவாகக் குறைந்து அரசாங்கத்திற்கு நிதி, பொறுப்புச் சுமை என்ற இரு இனத்திலும் நிகர லாபம் கிடைக்கும். முற்காலத்தை விடத் தன்னிச்சையாக மக்கள் நடக்கத் தொடங்கியிருக்கும்

இக்காலத்தில், அன்றை விட ஆசைகளையும், பேராசைகளையும் தூண்டிவிடக்கூடிய பொருள்களும், கொள்கைகளும் நாள்தோறும் மலிந்து, குற்றம் புரியும் வாய்ப்புகளும் பெருகிவரும் விஷமயமான சூழலில் மாற்று மருந்தாம் அமிர்தமாக மேற்சொன்ன விதங்களில் அரசாங்கம் அளிக்க வேண்டிய மத போஷணையும் முன்னைக் காட்டிலும் முக்கியத்துவம் பெறுகிறது.

எனவே முடிந்த முடிவாக, ஒரு நாட்டில் நன்மக்கள் பெருகி, குற்றங்கள் குறைய வேண்டுமெனில் அதன் அரசாங்கம் மதபோஷணை அளிப்பதைத் தனது கடமைகளில் ஒன்றாகக் கொள்ள வேண்டுமென்றாகிறது. இதனைத் தொடர்ந்து, 'ஸெக்யூலரிஸம்' என்பதை எம் மதமும் சாராத்தன்மை என்று தப்பர்த்தம் செய்து கொண்டு எதற்குமே ஆதரவு தராது விலகி நிற்பதை விடுத்து, குறிப்பிட்டதொரு மதத்தை மட்டும் சாராது எல்லாவற்றையும் ஆதரிப்பதே முறையான அர்த்தமெனப் புரிந்து கொண்டு அரசாங்கம் செயலாற்ற வேண்டும் என்றுமாகிறது.

இன்று அநேகமாக எல்லா நாடுகளிலுமே பல்வேறு மதத்தினர் கூடி வாழ்வதால், எல்லா மதங்களையும் சமநோக்குடன் ஆதரித்து, அவற்றின் அபிவிருத்திகளுக்கான போஷணையை அரசாங்கங்கள் அளிப்பதே 'ஸெக்யூலரிஸம்' எனப் பெயர் கொண்ட கொள்கைக்குப் பொருத்தமாக இருக்கும். உலகவியல் என்பதே நவீன விஞ்ஞானத்தாலும் புரட்சிக் கருத்துக்களாலும் உலகெங்கிலும் ஓங்கிப் பரவி, ஆன்மவியல் அடித்துச் செல்லப்படும் ஆபத்துக் கட்டத்தில் ஜன சமுதாயம் இருக்கும். இத்தருணத்தில், மக்கள் மாக்களாகி விடாமல் காக்க வேண்டுமெனில் இத்தகைய செக்யூலரிஸமே நடைமுறையாக வேண்டும்.

## அரசு போஷணை : ஹிந்து மதமும் பிற மதங்களும்

எல்லா மதங்களின் வளர்ச்சிக்காகவும் நம் நாட்டு அரசாங்கம் பொருட்செலவு மேற்கொள்ள வேண்டுமென மேலே கூறியது குறித்து ஒரு விஷயம் தெளிவுபடுத்த விரும்புகிறோம். இதனை ஹிந்து மதம் தவிர்த்த மற்ற மதஸ்தர்களும் நடுநிலையிலிருந்து கவனித்து ஏற்க வேண்டுமென விரும்புகிறோம்.

அம் மதங்களில் முக்கியமாகவுள்ள இரண்டின் வளர்ச்சிக்கு அரசாங்கத்திலிருந்து பொருளுதவி தேவைப்படாது எனும் அளவுக்கு அள்ளிச் சொரிந்து கொண்டேயிருக்க அதற்கென்றேயான ஸ்தாபனங்கள் இருப்பது உலகறிந்த உண்மை. ஸ்தாபன ரீதியில்

அமைக்கப்பட்டவை அவை, ஓர் அரசாங்கம் போலவே செயற்படுபவை. முற்காலத்தில் அரசாங்க முறைமையே பிற நாடுகளிலும் தமது அரசை விஸ்தரிப்பதாக இருந்தது போல, இன்றைக்கும் அம்மதங்கள் பிற மதத்தினரையும் தம்மதமாக்கி, அதை விஸ்தரிக்கப் பலவித உபாயங்களைக் கைக்கொண்டிருப்பதையும் உலகு அறியும். இன்றுள்ள நிலையில் மதம் வளருவதற்கு மட்டுமின்றி, இவ்வாறு மேலும் விஸ்தரிப்பதற்காகப் பலவிதங்களில் ஏராளமாகச் செலவிடவும் அவை பெரும் வசதி பெற்றிருப்பதும் யாவரும் அறிந்த யதார்த்த உண்மையே.

இத் தேசத்தின் மிகவும் பெரும்பாலான ஹிந்து மதத்தவரே இங்கு மாறுபட்டு நிற்பவர். அவர்களது அவல நிலைக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு பிற மதஸ்தர்கள் புது ஆலயங்கள் கட்டுவதற்கும், பழுதற்ற அவர்களது பழைய ஆலயங்களைப் புதுப்பிப்பதற்கும் நிதியத்திற்காக வேண்டுகோள் விளம்பரங்கள் செய்வதாக நாம் பார்ப்பதேயில்லை. ஹிந்துக்கள் விஷயத்திலோ ஒரு சிறிய கோயிலுக்கும் கூட நீண்ட காலம் வேண்டுகோள் விடுப்பதையும் பார்க்கிறோம். ஸ்தாபனம், தனி மனிதர் என இருவகைப்பட்ட பக்கபலமும் ஹிந்து மதத்திற்கு இல்லாததையே இது காட்டுகிறது.

## ஹிந்து மதத்தின் நிறுவன அமைப்பு :<br>பண பலமும் ஆள்பலமும் இல்லாதது

ஸ்தாபன ரீதியில் மதத்தைக் கட்டிக்காப்பது என்பதைவிட, தனி மனிதர் ஒவ்வொருவரும் தமது தர்மப்படி மதாநுஷ்டானங்களைச் செய்து அவர்தம் சொந்த வாழ்க்கையின் சக்தியாலேயே மதம் காக்கப்பட வேண்டும் என்பதே ஆதிகாலத்திலிருந்து ஹிந்து மதக் கொள்கையாகவும் நடைமுறையாகவும் இருந்து வந்திருக்கிறது. 2500 வருடம் முன்பு அவ்வாறு அநுஷ்டானத்தாலேயே ஜீவிய உதாரணம் படைத்து மதத்திற்கு உயிரூட்டியவர்களின் தொகை நலிவு கண்ட போதுதான், இங்கு ஹிந்து மத தத்துவ சாஸ்திர அடிப்படையையே கொண்ட பௌத்தம் என்ற புது மதம் நிறுவப்பட்டது. அதுவோ ஸ்தாபன ரீதிக் காப்புக்கு முக்கியமான இடமளிப்பதாக உருவாக்கப்பட்டது. புத்தரிடம் சரண் புகுவதோடு ‘சங்கம்’ என்ற பெயரில் மதப் பயிற்சி கொடுக்கவும் மதப்பிரசாரம் செய்யவும் அமைக்கப்பட்ட ஸ்தாபனத்திடம் சரண் புகுவதும் அதன் ஆதாரக் கோட்பாடுகளில் ஒன்றாயிற்று. புது மதம் உருவாகி வளர வேண்டுமாயின் பழைய மதஸ்தரையே மதம் மாற்றினாலன்றி எவ்வாறு இயலும்? அவ்வாறே நடைபெற்றது. அந்த நிலையில்தான் ஸ்ரீ ஆதி சங்கராசாரிய சுவாமிகள் தோன்றி இனி ஹிந்து மதத்திற்கும் ஸ்தாபனக் காப்பு ஏற்படுத்த வேண்டிய அத்தியாவசியம்

உண்டாகியுள்ளதென உணர்ந்து திருமடங்களை நிறுவலானார். பிற்பாடு ஹிந்து மதத்திலேயே பிற மரபுகள் பிறந்த போதும் அவர்களுக்கும் இவ்வாறே ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டன. இன்றளவும் இந்த எல்லா மரபுகளின் திருமடங்களும் இயங்கி வருகின்றன. ஆயினும், அவற்றுக்கெல்லாம் பொது மதமாக இப்பரந்த பாரத கண்டமெங்கணும் கோடானுகோடியர் தழுவியுள்ள ஹிந்து மதத்திற்கான ரட்சணையை அளிக்கப் போதுமான திரவிய பலமோ, ஆள்கட்டு என்ற பலமோ அவற்றுக்குக் கிடையாது. மடத் தலைவரது அநுஷ்டான பலத்தாலும், அவர் ஜீவிய சக்தியுடன் உபதேச ரூபமாகச் செய்வதாலும் மதத்தை ரட்சிப்பதே சிலாக்கியமென்றும் மடங்கள், திரவியம், ஆள்கட்டு ஆகியவற்றில் மிதமிஞ்சிப் பலம் பெற்றால், அது ஆத்மிகச் சூழ்நிலைக்குக் குந்தகம் விளைவிக்குமென்றும நம் மதப் பெரியோர்கள் உணர்ந்திருந்ததாலேயே இவ்வாறு வரம்புக்குக் கட்டுப்படுத்தியிருந்தது.

(தொடரும்)

**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

## VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 044 - 24740549

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஆண்டவன் ஏற்றும் ஆத்ம தீபம்

இந்தச் சைக்கிள் கதையைப்போல, நம்முன்னோர்கள் ஏற்கெனவே பெடல் பண்ணிவிட்டார்கள். நாம் பெடல் பண்ணாமல் அவர்கள் வழியிலேயே போகலாம். அப்படித்தான் இன்று போய்க் கொண்டு இருக்கிறோம். ஆனால் இதுவும் எத்தனை நாளைக்குப் போகும்? மறுபடியும் ஒருமுறை பெடல் பண்ண வேண்டும். பெடல் பண்ணாமலே விட்டுவிட்டால் வண்டி விழுந்துவிடும்.

ஆகையினால் நாம் மறுபடியும் தர்மம் பண்ண வேண்டும். படிப்பதைவிடக் கடைப்பிடிப்பதுதான் நமது தர்மமாக இருக்கிறது.

மாற்று மதத்தினர்கள் படிப்பைச் சொல்லிக் கொடுத்தாலே போதும் என்று எங்கு பார்த்தாலும் மிஷனரி ஸ்கூல், அந்த கான்வென்ட், இந்த கான்வென்ட் என்று பலமாக ஏற்படுத்திவிட்டார்கள்.

அதைப் பார்த்துவிட்டு நம்மால் சும்மா இருக்க முடியவில்லை. நாமும் ஸ்கூல்களை ஆரம்பித்து காலேஜ்களை ஆரம்பித்து நாமே, படிப்பு சொல்லித் தர ஆரம்பித்து விட்டோம்.



நமக்கெல்லாம் பார்த்துப் பார்த்து, கேட்டுக் கேட்டுவந்த பாரம்பரியம் இருக்கிறது. இப்போது அந்தப் பாரம்பரியம் படித்துப் படித்து வருகிறது.

எதைப் படிப்பது, எதை விடுவது என்று தெரியாமல் எல்லாவற்றையும் ஒரேயடியாகப் படித்துக் குழப்பிக் கொண்டு இருக்கிறோம்.

முதலில் குழப்பமே இல்லாமல் இருந்தோம். படிப்பு வந்தபிறகு எல்லாம் ஒரே குழப்பம் ஆகி விட்டது. பழையதை எல்லாம் மறந்துவிடாமல், அதை நினைத்துப் பார்த்துக் கடைப்பிடிப்பதுதான் நமக்கு நல்லது.

ஒரு தீர்ப்பு எழுதும்போது, இதற்கு முன்னால் வேறு கோர்ட்டிலே ஏதாவது தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்துத்தான் தீர்ப்பு எழுதுவார்கள்.

அதுபோல நம்முடைய, தாத்தா அது பண்ணினார், பெரியப்பா இது பண்ணினார். அப்பா அப்படிப் பண்ணினார் என்று அவரவர் செய்த தர்மத்தை அவரவர் கடைப்பிடிக்க வேண்டும்.

அந்த அளவுக்கு முடியாவிட்டாலும்கூட ஒரளவுக்காவது தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ முயற்சிக்க வேண்டும்.

மும்பை போன்ற பெருநகரங்களில் ஆன்மிகப் பணிகளை நடத்த வேண்டியது சிரமமாகத்தான் இருக்கும். ஆனால் விடுமுறை நாட்களிலே கூடலாம்.

இஸ்லாமியர்கள் வெள்ளிக்கிழமையன்று ஒன்று கூடி, ஐந்துமுறை தங்கள் கடவுளைத தொழுகிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்கள் பிரார்த்தனை செய்துவிடுகிறார்கள்.

ஆனால், நாம் எல்லாம் ஞாயிற்றுக்கிழமை வந்தால் சினிமாவுக்குப் போய்விடுவோம் என்று பெரியவர்கள் அந்தக் காலத்திலே சொன்னார்கள்.

அப்போது டி.வி. இல்லை. அதனால் அப்படிச் சொன்னார்கள்.

அதனால் லீவு நாட்களிலாவது நாம் ஒன்று கூடி, தர்மத்தைப் பற்றி கொஞ்சங்கொஞ்சமாவது சிந்திப்பதற்கு, கொஞ்சம் கொஞ்சமாவது பேசுவதற்கு, வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

அப்போதுதான் நம் பாரம்பரியத்தைக் கேட்ட புண்ணியம் கிடைக்கும். இத்தனைப் பெரிய தர்மம், அனாதி காலம் தொட்டு வந்த தர்மம் போய் விட்டதே என்று தளர்ந்துவிடாமல், நம்முடைய முயற்சியால் அந்தப் பாரம்பரிய விளக்குக்கு எண்ணெய்விட்டு கொஞ்சம் கொஞ்சமாகத் தூண்டி விட வேண்டும்.

தீபம் ஏற்றியாகிவிட்டது. அணைந்து விடாமல் இனிப் பராமரிக்க வேண்டும். அது அணையாமல் இருப்பதற்கு இரண்டு காரியங்கள் பண்ண வேண்டும்.

முதலில் கொஞ்சம் எண்ணெய் ஊற்ற வேண்டும். பிறகு திரியைக் கொஞ்சம் தூண்டிவிட வேண்டும். அப்படிச் ஜொலிக்க விட்டாலே போதும். வேறு எதுவும் செய்ய வேண்டாம்.

புதிதாக விளக்குத் தயாரிக்க வேண்டியதில்லை. எல்லாம் ஏற்கனவே ரெடியாக இருக்கிறது. எண்ணெய்விட்டுப் பக்குவமாகத் திரியைத் தூண்டிவிட வேண்டும். இதை எப்போதோ ஒருநாள் மட்டும் செய்தால் போதாது. அவ்வப்போது செய்து கொண்டே இருக்க வேண்டும். அதிலே தொடர்ச்சியாக

எப்போதும் ஒரு திரியைப் போட்டு வைக்க வேண்டும்.

**ஞான தீபேன பாஸ்வதா**

நம்முடைய தர்மமானது ஒரு ஞான தீபம்-

அந்த ஞானமானது நம்முடைய புத்தியில் இருக்கிறது. அந்தப் புத்தியை நாம் எல்லாம் நல்ல வழியிலே உபயோகப்படுத்தி, வரும் தீபாவளி நாளிலே நாம் தீபத்தைப் புத்தியிலே ஏற்றிக் கொள்ள வேண்டும். இருதயத்திலேயும் ஏற்றிக் கொள்ள வேண்டும். அந்த ஞான தீபம்தான் புத்திக்கு நல்ல ஒளியைக் கொடுக்கும்.

பகலில் சூரிய ஒளி இருக்கும். இரவில் தீப ஒளி இருக்கும். கண் இல்லாதவருக்கு இந்த இரண்டு ஒளியும் இல்லை. ஆனால் உள்ளுக்குள்ளே புத்தி ஒளி இருக்கும். புத்தியும் இல்லாதவருக்கு என்ன ஒளி இருக்கும்? ஒண்ணுமே இருக்காது— சிரமம்தான்.

அப்போதும்கூட அவனுடைய காரியங்களை செய்து கொடுப்பது எது? ஆண்டவனுடைய ஞான தீபம்தான்?

ஒருவன் மனவளர்ச்சி சுத்தமாக இல்லாதவனாக இருந்தாலும், குறைவாக உள்ளவனாக இருந்தாலும் கூட அவனுடைய சாப்பாடு, செயல்முறைகள் நடக்க எந்தச் சக்தி உதவுகிறது.

அதுவும் ஆண்டவனுடைய ஆத்ம தீபமே, ஞான தீபமே ஆகும். இதை ஏகஸ்லோகி என்ற இடத்திலே ஆதிசங்கரர் சொல்லி இருக்கிறார்.

அப்படி ஒரு ஞானதீபம் உங்கள் உள்ளத்திலே இருப்பதால் நம் இதயத்தைப் பரிசுத்தமாகவும் பவித்ரமாகவும் மாற்றிக் கொண்டு, சாப்பிடுவது முதல் சிந்தனை வரை அனைத்தையும் நல்லதாக ஆக்கிக் கொண்டு இந்த காலகட்ட சூழ்நிலைக் கேற்றவாறு நம் குடும்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு, தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ- முடிகிறதோ, இல்லையோ - நம்முடைய பிள்ளைகளுக்காகவாவது நம் தேவைகளை விட்டுக்கொடுத்து விட்டு நல்ல சத்சங்கத்திலே சேர்ந்துகொள்ள வேண்டும். நல்ல விஷயங்களைக் கேட்டு அவற்றை கொஞ்சமாவது நடத்திக் காண்பிக்க வேண்டும். நாம் அப்படி நடத்திக் காண்பித்தால்தான் நம் பிள்ளைகள் அதைக் கடைப்பிடிப்பார்கள்.

இங்கே மும்பை மக்கள் நிறைய வந்திருக்கிறார்கள். தீபாவளி நன்னாளில் உங்கள் அனைவருக்கும் ‘கிருஷ்ணரின் நல்லாசி கிடைக்க வேண்டுமென்று கூறி ஆசீர்வதிக்கிறேன்.

**கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்**


**ஓம் நமோ நாராயணா**

**ஜெயஜெய சங்கர... ஹர ஹர சங்கர...**

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## கோடாட், தெலுங்கானா



**''ஸ்ருதி ஸ்மிருதி புராணானாம்**
**ஆலயம் கருணாலயம்**
**நமாமி பகவத்பாத சங்கரம் லோகசங்கரம்''**

ஸ்ரீகுருப்யோ நம!

**அபார கருணா சிந்தும் ஞானதம் சாந்த ரூபினம்**
**ஸ்ரீ சந்திரசேகர குரும் ப்ரணமாமி முதான்வஹம்**
**சதாசிவ சமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம் ।**
**அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம் ।।**

காஞ்சிபுரத்தில் இருந்து புறப்பட்டு, கடப்பா, தாடப்பத்ரி, அனந்தபூர், பெல்லாரி, சாந்தூர், ஹம்பி, ஹோஸ்பெட், ராய்ச்சூர், மெஹபூப் நகர், பாக்ய நகரம், திண்டுகல் சென்று கோடாட் வந்துள்ளோம். அங்கங்கு ஒவ்வொரு கார்யக்ரமம் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

ஹோஸ்பெட்டில் ஒவ்வொரு வருஷமும் சாதுர் மாசம் - இப்பொழுது சாதுர் மாசம் சமயம் காகிநாடா செல்கின்றோம். சாதுர் மாச பூஜை சமயம், இரண்டு மாதம் ஒரே இடத்தில் இருப்போம். அச்சமயம், வியாபாரிகளாகிய நீங்கள் எப்படி பட்ஜெட் என்று கூறுகிறேர்களோ, அதுபோல் வரும் வருஷத்திற்கு எப்படி பஞ்சாங்கம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற சதஸ் இரண்டு மூன்று நாட்கள் இருக்கும். பஞ்சாங்க கர்த்தர்கள் வருவார்கள். திரிக் சித்தாந்தம், வாக்கிய சித்தாந்தம் அனைவரும் வந்து அமர்ந்து கொண்டு, ஒவ்வொரு நாளாக படிப்பார்கள். சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரை படிப்பார்கள். இப்பொழுது ஜனவரி, பிப்ரவரி பிரபலமாக உள்ளது.

குழந்தைகள் மத்தியில் கூட சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி இந்த மாதங்கள் பிரபலமடைய வேண்டும். பூஜைகளுக்கு திதி, புண்ய ஸ்மரணம் அனைத்திற்கும் கால நிர்ணயம் பார்த்து சொல்கிறார்கள். சில பூஜைகளில் உதயம் கூட அந்த கால நிர்ணயத்தில்

உள்ளதா? பஞ்சமி, சஷ்டி உள்ளதா? உதயம் (ஔதைக வ்யாப்தி) என்றால் அந்த நாளில் ஸ்தானம், பூஜை நிர்ணயம் செய்கிறார்கள். ஆப்திகம் என்பது சில விஷயங்களில் - பித்ருக்கள் பூஜைக்கு பார்க்கிறார்கள். குதப காலம் என்றால் மாத்யாநிகம் அந்த நேரத்தில் ஏதாவது திதி உள்ளாதா என்று பார்ப்பது. சில விஷயங்கள், சந்த்யா சமயம்- த்ரியோ தசி என்று எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே பிரதோஷம் என்கிறார்கள். அது அந்த சந்த்யா சமயத்தில் உள்ளதா? த்ரயோதசி இரண்டு நாளில் இருந்தால், எந்த நாளில் பிரதோஷ பூஜை? எந்த நேரத்தில் இருந்து துவங்குகிறது. அதெல்லாம் பார்க்கிறார்கள். சிவராத்திரிக்கு திரயோதசி சம்பந்தம் எவ்வாறு உள்ளது? அம்மாவாசை சம்பந்தம் எல்லாம் பார்க்கிறார்கள்.

கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீபம் அருணாசலச் ஷேத்திரத்தில் ஒரு விதமாக உள்ளது. வீடு வீடாக செய்யும் கார்த்திகை தீப பூஜை, ஒவ்வொரு விதமாக உள்ளது. சர்வாலய தீபம், அருணாச்சல தீபம் என்று உள்ளது. அருணாச்சலக் கோவிலில் நட்சத்திரம் பிரதானம். பரணி நக்ஷத்திரத்தில் ஆலய தீபம் ஏற்றுகிறார்கள். கிருத்திகா நக்ஷத்திரம் சமயம் மலை மீது தீபம் ஏற்றுகிறார்கள். சில சமயங்களில் கிருத்திகா நக்ஷத்திரம், பூர்ணிமா சேர்ந்து வரும். சில சமயங்களில், அருணாச்சல தீபம், சர்வாலய தீபம் ஒன்றாக வருகிறது. பூர்ணிமா வெவ்வேறு நாளில் வந்தால், அருணாச்சல தீபம் இன்று, சர்வாலய தீபம் என்று தீர்மானம் செய்கிறார்கள். இவை ஒவ்வொரு கோவிலுக்கும் சம்பந்தப்பட்ட விஷயங்கள். சிவராத்திரி என்றால், வீட்டில் செய்யும் பூஜை ஒருநாள். சைவ ஆகமம் படி பிரதிஷ்டை செய்த சிவ ஆலயத்தில் கூட இதையெல்லாம் பற்றி உரையாடி, தர்ம சாஸ்திரம் படித்தவர்கள் அதற்கு வருகிறார்கள். பொது சட்டம் படித்தவர்கள் எப்படி சட்டம் சம்பந்தமாக பேசுகிறார்களோ, அதே போல, இந்து தர்ம சாஸ்திரம் படித்தவர்கள் இந்த சதஸ்க்கு வருகிறார்கள்.

அர்த்தோதய புண்ணிய காலம். மகோதயம் என்பது ஒரு புண்ணிய காலம். அக்காலத்தில் சமுத்திரம் சென்று ஸ்நானம் செய்தல் விசேஷம். அந்த நாளில் தானம் செய்தல் விசேஷம். நாம் நினைத்த நல்ல தானம் செய்தால், நல்ல புண்ணியம் கிடைக்கும். அம்மாவாசை, திங்கட்கிழமை என்று சில சேர்ந்து வர வேண்டும். அப்படி சேர்ந்து வந்தால் அர்த்தோதய புண்ணிய காலம், யோகம், கரணம், திதி, வாரம் போன்றவை சேர்ந்து வர வேண்டும். ஏதாவது ஒன்று குறைந்தால், அது மகோதயம். அப்பொழுது சமுத்திர ஸ்நானம் செய்ய வேண்டும்.

நமது ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், தஞ்சாவூர் அருகில் வேதாரண்யம் என்ற ஊர் உள்ளது. ராமர் கிஷ்கிந்தையில் இருந்து கிளம்பும் சமயம் - ஆஞ்சநேய ஸ்வாமி ''**திரிஷ்டா சீதேதி தத்வத:** '' பார்த்தேன் சீதையை என்றார். சீதை.. என்று கூறினால்,

ராமபிரானுக்கு சீதையை பார்த்தாரா, இல்லையா என்ற சந்தேகம் வரும் என்று நினைத்து, ராமனுக்கு '' **த்ரிஷ்டா சீதா''** என்றார். சிறிது நேரம் கூட ராமனுக்கு கவலை இருக்கக் கூடாது என்று ஆஞ்சநேயர் கூறினார். இராமன் கஷ்டப்படுகிறார் சீதையை தூக்கிக் கொண்டு சென்றதனால். பல காரணத்தால் அவர் கஷ்டபட்டார்.

**ஸ்ரீ ப்ரனஷ்டேதி காருண்யாத்** பெண்களுக்கு கஷ்டம் வரக்கூடாது என்று அக்காலத்தில் ஆட்சி செய்தவர்களின் லட்சியம். அவர்களை பத்திரமாகக் காப்பாற்ற வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். பெண்கள் ரத்தினம் என்பார்கள்.

**யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே ரமந்தே தத்ர தேவதா:**

எந்த தேசத்தில், எந்த ராஜ்யத்தில், எந்த பிரதேசத்தில் பெண்களுக்கு ஆதரவு, சன்மானம், கௌரவம் அளிக்கப்படுகிறதோ, அங்கே தேவதைகள் சந்தோஷம் அடைகிறார்கள்.

**யாதேவி சர்வ பூதேஷு லக்ஷ்மி ரூபேண**
**சம்ஸ்திதா, சாயா ரூபேண**
**சம்ஸ்திதா, நித்ரா ரூபேண**
**சம்ஸ்திதா வித்யா ரூபேண சம்ஸ்திதா**

வித்யா ஸ்வரூபமாக பெண்கள் உள்ளார்கள். **லக்ஷ்மி ரூபேண சம்ஸ்திதா. தயா ரூபேண சம்ஸ்திதா** அவ்வாறு நமக்கு அம்பாள் தெரிகின்றாள். இம்மாதிரி பூஜைகள் வந்த சமயம், ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் சமுத்திர ஸ்நானம் செய்து, கோ தானம் செய்தார்கள். முடிந்த அளவு பஞ்சாங்கங்களில் உள்ள வித்தியாசங்கள் இந்த சதஸ் மூலம் குறைக்கப்படுகின்றன.

அடுத்ததாக அக்னிஹோத்ரிகள், இந்த நாட்டில் யாகங்கள், ஹோமங்கள் செய்து வருகிறார்கள. அதன் மூலம் அவர்களுக்கு புண்ணியம் வருகின்றது. மக்களுக்கும் புண்ணியம் கிடைக்கின்றது. அந்த காலத்தில் வாஜபேய யாகம் செய்தால், சன்மானம் தரப்பட்டது அரசர்களால். இந்த வருஷம் கூட, காஞ்சி மடத்தின் சார்பில் ஸ்ரீரங்கம் அருகில் ஒரு யாகம் நடைபெற்றது. பின் அவர்களுக்கு மரியாதை செய்யப்பட்டது.

இந்த பாரத தேசத்தில், அக்னி ஹோத்திரிகள் 150 முதல் 200 பேர்கள் மட்டுமே உள்ளார்கள். இந்த பெரிய தேசத்தில் 200 பேர்கள் மட்டுமே உள்ளார்கள். அவர்களை ஆந்திர மாநிலம், தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கர்நாடக, ராஜஸ்தான், உத்திரப்ரதேசம் போன்ற மாநிலத்தில் இருந்து வரவைத்து கௌரவம் செய்யப்பட்டது. ஆந்திர மாநிலத்தில் பல அக்னி ஹோத்திரிகள் உள்ளார்கள் என்பது ஒரு கௌரவம். அவர்களுக்கு கூட சன்மானக் காரியங்கள் உள்ளன.

வேத சதஸ் - அத்வைத சபா - சங்கராச்சாரியார் அத்வைத பிரசாரம் செய்தார். பிரஸ்தான த்ரையம் என்பார்கள். பிரம்ம சூத்திரம், பகவத் கீதை, ஈஸ, கேன, ப்ரஷ்ன, முண்டக, மாண்டுக்ய என்ற உபநிஷத்கள் பாஷ்யம் விவரிப்பார்கள். இங்கிருந்து நாற்பது கிலோமீட்டர் தூரத்தில் மட்டப்பள்ளி என்ற ஊரில் ஸ்ரீ நரசிம்ஹ சுவாமி க்ஷேத்திரம் உள்ளது. அந்த நரசிம்ஹ சுவாமி குறித்து ஆதி சங்கராச்சாரியார் ஸ்தோத்திரம் எழுதி உள்ளார். அவர் இங்கே உள்ள அஹோபிலத்தில் ஆதி சங்கரர் தபஸ் செய்தார். ஸ்ரீ சைலத்திலும் செய்தார். இந்த இரண்டு க்ஷேத்திரங்களும் சங்கராச்சாரியார் தரிசனம் செய்த திவ்ய க்ஷேத்திரம்.

**संसारवृक्षबीजमनन्तकर्म-**
**शाखायुतं करणपत्रमनङ्गपुष्पम् ।**
**आरुह्य दुःख फलितः चकितः दयालो**
**लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ।। ८ ।।**

**ஸம்ஸாரவ்ருக்ஷமகபீஜ மனந்தகர்மசாகாயுதம்**
**கரணபத்ரமனங்கபுஷ்பம்**
**ஆருஹ்ய து:க பலித: சகித:**
**லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்.**

என்று கராவலம்ப ஸ்தோத்திரம் எழுதினார். ஆதி சங்கராச்சாரியார் அவர்கள் ''ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ஹ தாபநீய உபநிஷத்'' க்கு பாஷ்யம் எழுதியுள்ளார். அப்பேற்பட்ட ஆதிசங்கரர் பற்றிய அத்வைத சபா குறித்து பிரசங்கம் செய்கிறோம். நீங்கள் அனைவரும் நாங்கள் இங்கு வந்தபோது பூர்ண கும்ப ஸ்வாகதம் செய்தீர்கள். அச்சமயம் மந்திரங்கள் எல்லாம் சொல்கிறார்கள் -

**ந கர்மணா ந ப்ரஜயா தனேன-**
**த்யாகேனைகே அம்ருதத்வ மானஸு: ।**
**பரேண நாகம் நிஹிதம் குஹாயாம்-**
**விப்ராஜ தேதத்யதயோ விஸந்தி ।।**

**न कर्मणा न प्रजया धनेन त्यागेनैके अमृतत्वमानशुः।**
**परेण नाकं निहितं गुहायां वेभ्राजदेतद्यतय विशन्ति ।।**

**வேதாந்த-விஜ்ஞான-ஸுநிஸ்சிதார்தா: -**

**-ஸந்யாஸ-யோகாத்-யதயஷ்ஸுத்த-ஸத்த்வா: ।**

**वेदान्तविज्ञानसुनिश्चितार्था: सन्यासयगाद्यतयश्शुद्धसत्त्वा: ।**

**ते ब्रह्मलके तु परान्तकाले परामृतात्पारिमुच्यन्ति सर्वे ।।**

வேதாந்தம் என்று எதெல்லாம் உள்ளதோ, ''**பிரம்ம ஸத்யம், ஜகன் மித்யா**'' என்பதை திடமாக நம்பிக்கொண்டு, அதே உண்மை என்று உணர்ந்து, அம்மாதிரி தியாக ஜீவிதர்கள் எவர்கள் உள்ளார்களோ, நிர்மலமான மனதுடன் கலந்து, இறைவன் சேவை செய்கிறார்களோ, உலகத்திற்காக சேவை செய்கிறார்களோ, அவர்களை கௌரவம் செய்வதாக மந்திரங்கள் உள்ளன.

பூர்ண கும்பம் என்பது மங்களகரமானது. நமது தேசத்தில் சகுனம் என்ற ஒரு பத்ததி உண்டு. ஒரு வீட்டில் மருமகள் நுழையும்போது எப்படி வர வேண்டும். தீபம் ஏற்ற வேண்டும். எவர் பிரசாதம் முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற பத்ததிகள் உண்டு. அதில் பூர்ண கும்பம் என்பது ஒன்று.

**கலசம், ஜலசம் வ்ரதம் புரஹா ।**

**கலஹம்ச கலையாம் பஹு ஹம்ச: ।।**

ஒரு ஹம்ச பக்ஷி, காவியத்தில் வரும் விஷயம். நீர் நிறைந்த கலசத்தை பார்த்தது நாம் தொடங்கும் காரியம் நல்ல விதமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டது. மாவிலை, தேங்காய், நீர் இதெல்லாம் காண்பித்து, நமக்கு நல்லது நடக்க வேண்டும்.

பிரம்ம முஹூர்த்தத்தில், சுப்ரபாதம், நல்லதை கேட்டல், பார்த்தல், கூறுதல். அதனால் தான்

**கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வாஸம்த்யா ப்ரவர்ததே ।**

**உத்திஷ்ட நரஸர்தூல கர்தவ்யம் தைவமாஹ்னிகம் ।।**

எதற்கு இதெல்லாம் முன்னே காலையில் வைத்துக் கொள்ள வேண்டும். ''**கர்தவ்யம் தைவமாஹ்னிகம்**''? நாம் நாளிதழ் படிக்கவா? நாம் நித்யம் அனுஷ்டானம் செய்து கொள்ள முன்னே எழுந்து கொள்ள வேண்டும். அன்றன்று செய்ய வேண்டிய சந்தியா வந்தனம், தீப பூஜா, பிரார்த்தனை ஸ்லோகங்கள், நம் வீட்டில் எந்த குல தெய்வம் படம் வைத்துக் கொண்டு உள்ளோமோ, அங்கு தீபம் ஏற்றுதல், கோலம் போடுதல், நாம ஜபம் செய்தல், தார்மீக செயல் - நாம ஜபம், காலையிலும், மாலையிலும் செய்ய வேண்டும். இந்துக்கள் அனைவரும் தினமும் ஐந்து நிமிடம் அவர்களுக்கு பிரார்த்தனை செய்வது

நல்லது. ஆரோக்கியம் தேவை, ஐஸ்வரியம் இருக்க வேண்டும், வீட்டு வசதிகள் தேவை, எனது குழந்தைகளுக்கு உத்தியோகம் தேவை, நன்றான பெண் கிடைக்க வேண்டும், நன்றான மாப்பிள்ளை கிடைக்க வேண்டும். அது மட்டுமல்ல. உலகத்தில் சாந்தியும், அமைதியும் நிலவ வேண்டும். தேசம் சுபிக்ஷமாக இருக்க வேண்டும். தேசம் பத்திரமாக இருக்க வேண்டும்.

நீங்கள் அனைவரும் வந்து உள்ளீர்கள். எல்லோரும் விதம் விதமான கல்வி, மற்றும் வேறு இடத்தில் இருந்து வந்து இங்கு இரண்டு மணி நேரம் அமைதியாக இருக்கின்றீர்கள். அதற்கு காரணம் பக்தி. நமது தேசத்தின் கலாசாரம், சமஸ்க்ரிதம், தர்மம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அது தெரிந்து கொள்ள சாதுர் மாஸ்ய சமயத்தில், அநேக சதஸ் நடத்தப்படுகின்றன. அக்னிஹோத்ரி சபா, அத்வைத சபா, வித்யாரண்ய ஸ்வாமிகள் என்ற ஒரு மஹான், மந்த்ரார்த்தம் - வித்யாரண்யம் என்பதை இயற்றினார். அதை ஐந்து அல்லது ஆறு வருடம் படிக்க வேண்டும். வேதம் படித்து முடித்த பிறகு, post & doctorate என்பார்கள், வித்யாரண்ய பாஷ்யம் படித்தவர்கள், அர்த்தம், தாத்பரியம் சொல்வார்கள்.

தேவையான சாலைகள், வேலைகள் மற்றும் லௌகீக தேவைகளை அரசாங்கம், மற்றும் Rotary, Lions, NGOக்கள் பூர்த்தி செய்கிறார்கள். தார்மீக தேவைகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு விவசாயி அவர்கள் வந்து என்று விதை விதைக்க வேண்டும், என்று வீடு கட்ட வேண்டும், போன்ற சந்தேகங்கள் உண்டு, அதை வந்து கேட்கிறார். ஏதாவது பிராயச்சித்தம் செய்ய வேண்டுமா? பரிகாரம் செய்ய வேண்டுமா? சந்திர கிரகணம், சூரிய கிரகணம் வருகின்றது. உணவு உண்ணலாமா? கூடாதா? சிவராத்திரி அன்று என்ன செய்ய வேண்டும்? நவராத்திரி என்றால் பூஜை செய்வது விசேஷம். **ராத்திரி ரூபா எதோ தேவி, திவா ரூபோ மகேஸ்வர:** - பகல் ரூபத்தில் சிவன் உள்ளார். இரவு ரூபத்தில் மாதா, தேவி இருக்கிறாள். கன்யா பூஜை செய்தல், பசு பூஜை செய்தல், எவை எல்லாம் முக்கியம். தாம்பூலம் தருதல் நமக்கு நவராத்திரி சமயம் முக்கியம். **கன்யா பூஜா சுப்ரசன்னா ஹ்ரிதயாம், காமேஷ்வர கஷிதாம்.**

அந்த முறையில் சாதுர் மாச பூஜை நடைபெறப் போகிறது. ஆஷாட மாதம் சுக்ல பௌர்ணமி அன்று வியாச பூஜா, அநேக மகரிஷிகளுக்கு பூஜைகள் நடைபெற உள்ளன. நமது தேசத்தில் குரு பக்தி என்பது முக்கியம். **மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ**, அதற்கு பின் **ஆச்சார்ய தேவோ பவ**. எந்தெந்த குரு உள்ளார்களோ, அவர்களை யெல்லாம் வணங்குதல் சாதுர் மாசம் ஆகும். நீங்கள் அனைவரும் இருக்கும் இடத்தில் எந்தெந்த குருக்கள் உள்ளார்களோ, அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். ஸ்தோத்திரம் எல்லாம் படிக்க வேண்டும். அதற்காக இங்கே புஸ்தகம் எல்லாம் தருகிறார்கள்.

(தொடரும்)

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

*நவரோஜ் ராகம் ஆதி தாளம் மானச ஸன்சர ரே*

**मानस सन्चर रे ब्रह्मणि मानस सन्चर रे**

**யமானஸ சன்சர ரே ப்ரம்மணி மான ஸ சன்சர ரே**

**स्त्री रमणीकुच दुर्ग विहारे सेवकजन मन्धिर मन्दारे (मानस)**

**ஸ்ரீ ரமணீகுச துர்க விஹாரே ஸேவகஜன மந்திர மந்தாரே (மானஸ)**

**मदशिखिपिन्जालन्क्रुतब चिकुरे महनीयकपोल विजित मुकुरे (मानस)**

**மதசிகிபிஞ்சாலங்க்ருதசிகுரே மஹனீயகபோல விஜித முகுரே (மானஸ)**

**परम हम्समुकचन्द्रचकोरे परिपूरितमुरलीरवधारे (मानस)**

**பரம ஹம்ஸமுகசந்த்ரசகோரே பரிபூரிதமுரலீரவதாரே (மானஸ)**

*பொருள் : அட மனமே ப்ரம்மத்தில் சஞ்சாரம் செய் அட மனமே ப்ரம்மத்தில் ஸஞ்சாரம் செய். ஸ்ரீதேவி என்னும் காதலியின் கொங்கைகளின் மலையரண்களில் இன்புறுவதாயும் அடியார்களுக்கு வேண்டியவற்றைத் தரும் ஐந்து கல்பக வ்ருக்ஷங்களிலும் சிறந்த மந்தார வ்ருக்ஷமாய் உள்ள ப்ரம்மத்திடம் கர்வம் கொண்ட மயிலின் தோகையை திருமுடியிலே அலங்காரமாய் அணிந்து கொண்டதும் பளபளப்பில் கண்ணாடியை வென்று சிறப்பு வாய்ந்த கன்னங்களை உடையதுமான ப்ரம்மத்திடம் பரமஹம்ஸர்களாகிய சந்த்ரர்களை கண்ணால் பருகும் சகார பக்ஷியாயும் முரளீ என்னும் குழலிலிருந்து நாதம் தாரையாய் பெருகுவதுமாயுள்ள ப்ரம்மத்திடம்.*

# ராஜதரங்கிணி 14

பி. ஆர். கண்ணன்

தரங்கம் 7

## சிவஸ்துதி

**மாதுஸ்தேஜநி நிர்மிதே பித்ருகுலே ஶ்லாக்யா தநுர்வேதஸா**
**த்வம் ஸந்த்யாஹிதஸந்நிதிர்மம ஜபாரக்தேதரே கேலஸி ।**
**ஸந்த்யாவந்தநஸாப்யஸூயகிரிஜாஸ்துத்யேத்ருஶைர்வாக்சலைர்ய :**
**ஸந்த்யாமபி வந்ததே ஸ்ம ஸ ஜகத்ப்ரீணாது கௌரீஶ்வர : ।। 1 ।।**

உன்னுடைய தூய வம்சத்தின் தாயாக இருக்கும் உன்னை சிறந்த ரூபத்துடன் ப்ரம்மா ஸ்ருஷ்டி செய்துள்ளார்; ஸந்த்யா காலத்தில் நான் ஜபத்திலிருக்கும் போது, நீ என் உதடுகளுடன் விளையாடுகிறாய் - என்று ஸந்த்யாதேவியை உபாஸிக்கும் சிவனிடம் பொறாமை கொண்ட பார்வதியிடம், சிவன் இவ்வாறு கபட வார்த்தைகளால் உயர்வாகப் பேசுகிறார். இவ்வாறு ஸந்த்யா தேவிக்கும் உயர்வைக் காட்டும் பார்வதிமணாளனான சிவன் உலகத்தை ஸந்தோஷப்படுத்தட்டும்.

இத்தரங்கத்தில் பல தீய ராஜாக்களைப்பற்றி ஆரம்பத்தில் பேசுகிறார் கல்ஹணர்.

**ராஜா அனந்ததேவர்**

காஷ்மீரில் லோஹர வம்சத்தின் முதல் ராஜா இவர். நற்குணங்கள் கொண்ட இந்த ராஜா கி.பி. 1029 ல் ஆட்சி செலுத்தினார். அமரேஶ்வர லிங்கத்தின் மேம்பாட்டு விழாவில் இவருடைய ராணி ப்ராம்மணர்களுக்கு பசுமாடுகள், வீடுகள், பொன், ரத்னங்கள் முதலியவற்றையும், அமரநாத க்ஷேத்ரத்தில் அக்ரஹாரங்களைக்கட்டியும் வழங்கினார். அமரநாதருக்கு த்ரிசூலம், பாணலிங்கம் முதலிய ஸமர்ப்பணங்களைச் செய்தார். கல்ஹணர் ராஜாவைப்பற்றி உயர்வாகப் பேசுகையில்:

**பவபக்திவ்ரதஸ்நாநத்யாகஶீலாதிபிர்குணை : ।**
**க்ருதிநாநந்ததேவேந முநயோபி விநிர்ஜிதா : ।। 201 ।।**

அனந்ததேவர் சிவபக்தி, வ்ரதங்கள், தீர்த்தஸ்னானம், த்யாகம், நன்நடத்தை ஆகிய குணங்களால் முனிவர்களையும் விஞ்சி நின்றார். அவருடைய உதவியாளராக இருந்த க்ஷிதிராஜர் என்பவர், தன் மனைவியின் விரோதத்தையும் மீறி, எல்லாவற்றையும் த்யாகம் செய்தல் என்கிற அம்ருதத்தை நாடினார். ராஜாவைப்பற்றிப் புகழும்போது, கல்ஹணர் விதஸ்தா நதியின் மேன்மை பற்றிச் சொல்கிறார்:

**வைதஸ்தேந து தோயேந ஜடரஸ்தேந யே ம்ருதா : ।**
**மோக்ஷம் கச்சந்த்யஸந்தேஹம் தே யதா ப்ரஹ்மவாதிந : ॥ 473 ॥**

'விதஸ்தா நதியின் நீரைப்பருகி அந்நீர் வயிற்றிலிருக்கையில் மரிப்பவர், ஐயமின்றி, ப்ரம்மவாதிகளைப் போல் மோக்ஷமடைவர்.'

காலப்போக்கில், தன் புத்ரன் கலஶன் என்பவனுடன் வேறுபாடுகள் முற்றி, கலஸன் அவரை நாட்டிலிருந்து துரத்திவிட்டான். ராஜா பின்னர் மரித்தார்.

**ராஜா கலஶன்**

கலஶன் அரியணையேறினார். தீயகுணங்கள் நிரம்பியிருந்தாலும், விஜயேஶ்வரர் ஆலயத்தில் பொற்குடையையும், கலஶேஶ்வரர் ஆலயத்தில் நிறைய பொன் வேய்ந்த கூரையையும் ஸமர்ப்பித்தார். ஆனால் அவருடைய இழிந்தமதி படைத்த உதவியாளர்கள் தங்கத்திற்காக தேவதைகளின் பொன்னாலான மூர்த்திகளை உடைத்தனர்.

கலஶனுக்குப் பின்னர் வந்த ராஜாக்கள் பலர் மிகவுமே தீயவர்களாக இருந்தனர்.

**ராஜா ராணாதித்யர் - II**

ராணாதித்யர் மன்னரானவுடன், தாம்ரஸ்வாமியின் விக்ரகத்தை ஏற்கெனவே உடைத்த பாபம் ராஜ்யத்திலிருந்தபடியால், இந்த ராஜா மார்த்தாண்டர் (ஸூர்யன்) கோவிலில் சரணடைந்தார். அங்கு பொன்னாலான விக்ரகத்தை நிறுவினார். அங்கேயே மரித்தார்.

**ராஜா ஹர்ஷர்**

கல்ஹணர் ஆரம்பத்திலேயே ராஜா ஹர்ஷரிடமிருந்த முரண்பாடுகளை எடுத்துக் கூறுகிறார். அவர் கொள்ளையடித்தார், கொடையும் செய்தார். அவர் அன்பு செய்தார், ஆனால் கொலையையும் நிகழ்த்தினார். சக்திவாய்ந்த ராஜாவாகயிருந்தும், அவருடைய ஆணைகளை குடிமக்கள் எப்போதும் பின்பற்றவில்லை. அவர் கவிஞரும்கூட.

அவருடைய புலமை ப்ருஹஸ்பதியை விஞ்சியிருந்தது. இரவுநேரத்தில் அவர் நடத்திய ராஜஸபை இந்த்ரனின் ஸபையை ஒத்திருந்தது. அவருடைய ராணி கொடையிற் சிறந்து விளங்கினாள். ஸ்ரீநகர், த்ரிபுரேஶ்வரர் ஆகிய இடங்களில் அக்ரஹாரங்களைக்கட்டி வழங்கினார்.

பிற்காலத்தில் ராஜா கொடூரமான மந்த்ரிகளின் சொற்கேட்டு, பல கொடிய செயல்களில் ஈடுபட்டார். ஆலயங்களின் தங்கத்தைக் கொள்ளையிட அனுமதித்தார். துர்யோதனனைப்போல், தன் குடும்பத்தையே அழிவுக்கு உள்ளாக்கினார்; எதிரிகள் பயனடைந்தனர். கல்ஹணர் இங்கு மனோதத்வரீதியில் பல நீதிகளைச் சொல்கிறார்:

**அமாநுஷத்வம் புருஷாதிராஜா விடஸ்தவை : ஸ்வஸ்ய விசிந்த்ய ஸத்யம் ।**
**த்ருதீயமக்ஷ்யப்யதிகம் புஜௌ வா மமேதி மத்வா ந விதந்தி ம்ருத்யும் ॥ 1112 ॥**

'துதிபாடுவோர்களின் புகழ்ச் சொல்லைக் கேட்டு, ராஜா, தனக்கு அஸாதாரணமான மூன்றாம் கண், இரண்டிற்கு மேற்பட்ட கை இவை இருப்பதாக எண்ணி, மரணம் என்று ஒன்று இருப்பதாகவே உணரார்.'

ஹர்ஷர் இறுதியில் வெகு கொடூரமாக குடும்ப சேனாதிபதிகளினாலேயே கொல்லப்பட்டார்.

(தொடரும்)

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு, etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : V.K.N. Enterprises, Mylapore,
Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com
We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.

# பிற்காலத்துத் தமிழ் நூல்களில் அத்வைதம்

(ஸ்ரீ தேவ சங்கர டாக்கர்)

**என்னை யுடையானும் ஏகமாய் நின்றானும்**
**தன்னை யறியாத தன்மையனும்.**

காரைக்கால் அம்மையார், அற்புதத் திருவந்தாதி 92.

**நித்திய மாகு மான்மா வேகமாய் நிகழ்த்து மாயா**
**சத்தியா யளப்பில் பேத மாமுறு பேதஞ் சாற்றில்**
**வைத்தநீர்க் குடங்கடோறுந் தோன்றிடு மதியம்போல**
**வுய்த்திடு முபாதி தன்னாற் பற்பல வுருவந் தோன்றும்.**

கூர்மபுராணம் சாங்கிய யோக முரைத்த.17.

**குணங்களைக் கடந்தோ யெனினு மாயையினைத்**
**தோய்தலாற் குணமுடையவன்**
**அணங்கொரு பாலுங்கறை மிடற்றழகு**
**மம்பகமூன்று வாமுருக்கொண்**
**டிணங்குறு நாமஞ் சிவன்பவன் முதலா**
**வியைந்தயனரி யரமுன்னா**
**முணங்கிடா வுலகை நடத்துவோனாகி**
**யோங்கினை நீங்கரும் பொருளே.**

**சிவஞான வள்ளலார்.**

**பிரமன் முதற்றா பரமீறாப் பேசாநின்ற வுலகமெலாம்**
**பரவு மந்தப் பரமசிவனே பண்பாரந்தப் பரசிவன்றன்**
**சொரூப ஞான முள்ளோனே துலங்குசீவன் முத்தனாங்**
**கருமமாதி களாற்சீவன் முத்தனாகான் கடைப்பிடிமின்.**

**சூதசங்கிதை, எக்கிய வைபவ. 3, 8.**

நிருமல சிவன்றன் மாயையாற் கனாப்போ னிருமிக்கப் பட்டனவெல்லாம்
மருவுகா ரியங்கா ரணத்திற்கு வேறு காமையின் மாயை நுபந்தான்
பெருகுமா யையுமற் றதிட்டான மாகும் பிரமத்தின் வேறான தன்று
குருபர னருள்கைக் கொண்டுமுக் குறும்புங் கொன்றுயர்ந் தோங்கிய

-முனிவீர். சூதசங்கிதை, எக்கிய. 4, 12.

எங்கு மாய்நிறைந் திலங்கிய ஞானவா ரிதியிற்
பொங்கு தெண்டிரை நுரைவரும் புற்புத மெனவே
யங்கண் மாநில முதலிய வுலகங்க ளனைத்துந்
தங்கி நின்றெழும் வேறுவே றறிவிலர் சாற்ற.

- பாகவதம், நைம்மிசமடைந்த. 3.

மறிந்து தோன்றிய திரை நுரை குமிழிமற் றனைத்துஞ்
சிறந்து தோன்றுமந் நீரலாற் றெரிக்கிவ்வே றிலைபோற்
குறைந்து தோன்றிய வுலகங்க ளனைத்தையுங் குறிக்கி
னிறைந்து தோன்றுநல் லறிவலா னிகழ்த்தவொன் றிலையால்.

பாகவதம், நைம்மிசமடைந்த. 4.

குடந்தொறுந் தோன்று கின்ற வாகாயமும் குலைதற்கேற்பத்
தடம்புன றோறுந் தோன்றுஞ் சந்திரன் றானு மென்ன
வுடம்புக டோறும் வேறா யுயிரென நின்றே யந்த
விடம்படு புலன்க ளாறு மியல்பினி லியற்று வேனான்.

மேவரு ஞானானந்த வெள்ளமாய் விதித்தோ னாதி
மூவரு மாகியந்த மூவர்க்கு முதல்வனாகி
யாவரும் யாவுமாகி யிறைஞ்சுவ ரிறைஞ்சப் பற்பல்
தேவரு மாகிநின்ற செங்கண்மா லெங்கள் கோவே.

பகவத்கீதை.

(தொடரும்)

# முகாம் நிகழ்ச்சிகள்

*முகாம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சி*

**ஸ்ரீசைலம் ஸ்ரீ ப்ரமராம்பா சமேத ஸ்ரீமல்லிகார்ஜுன ஸ்வாமி திருக்கோயில் கும்பாபிஷேகம்**



ஸ்ரீ ப்ரமராம்பா சமேத ஸ்ரீமல்லிகார்ஜுன சுவாமி திருக்கோயிலில் இன்று (21.02.2024) காலை 9:45 மணிக்கு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளின் திருக்கரங்களால் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. முன்னதாக காலை 9 மணியளவில், கிழக்கு சன்னிதி தெருவில் அமைந்துள்ள ஸ்ரீகாஞ்சி சங்கர மடத்திற்கு, அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீசத்யநாராயணா ஐஏஎஸ், செயல் அலுவலர், ஸ்ரீபெத்த ராஜு, தேவஸ்தான அதிகாரிகள் மற்றும் வேத பண்டிதர்களின் தலைமையில் ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகளை வரவேற்று, பாரம்பரிய மரியாதையுடன் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். புஷ்பகிரி சுவாமியும் உடன் சென்றார். கும்பாபிஷேகத்திற்கு ஸ்ரீமடத்திலிருந்து ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகளை அழைத்துச் செல்லும் முன்னர் அனைத்து அதிகாரிகளும் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வர ஸ்வாமி பூஜையை தரிசித்துக் கொண்டனர். பின்னர் தீர்த்தப் பிரசாதமும் வழங்கப்பட்டது.

ஸ்ரீமல்லிகார்ஜுனஸ்வாமியின் ஸ்வர்ண சிகரத்தின் உச்சிக்கு நன்கு அமைக்கப்பட்ட படிகளில் ஏறிச்சென்று ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் கும்பாபிஷேக சடங்குகளை தொடங்கி வைத்தார். கும்பாபிஷேக சடங்குகளை ஸ்ரீகண்டி ராதாகிருஷ்ணா, கோவில் வைதிகர்கள் மற்றும் வேத பண்டிதர்கள் நடத்தி வைத்தனர். சரியாக காலை 9:45 மணியளவில் ஸ்ரீமல்லிகார்ஜுன ஸ்வாமி ஸ்வர்ண கோபுர கலசத்திற்கு கும்பாபிஷேகம் மற்றும் தீபாராதனை செய்து, பிறகு பிரதான சன்னதிக்கு இறங்கிச் சென்று, அங்கு ஸ்ரீமல்லிகார்ஜுன ஸ்வாமிக்கு கலசாபிஷேகம், பூஜைகள் செய்து மற்றும் ஹாரத்தி செய்தார்கள்.

பின்னர், ஸ்ரீப்ரமராம்பா சந்நிதிக்கு சென்று அங்கு அபிஷேகம், பூஜை, ஹாரத்தி ஆகியன செய்தார்கள். பின்னர் வேத ஸ்வஸ்தி மற்றும் குருவந்தன நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படிருந்த யாகசாலைக்கு வந்தடைந்தார்கள்.

துணை முதலமைச்சரும், அறநிலையத்துறை அமைச்சருமான ஸ்ரீ கோட்டு சத்தியநாராயணா, அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீ சத்யநாராயணா, ஸ்ரீசைல தேவஸ்தான செயல் அலுவலர், ஸ்ரீ பெத்தராஜு ஆகியோர் ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகளுக்கு சன்மானம் சமர்ப்பித்தனர், ஸ்ரீபுஷ்பகிரி சுவாமிகள், காசி ஜங்கம்வாடி பீட சுவாமிகள் மற்றும் ஸ்ரீசைல பீட சுவாமிகளும் உடனிருந்தனர்.

அமைச்சர் அவர்கள் அனைவரையும் வரவேற்று, ஸ்ரீசரணர்கள் மற்றம் மற்ற சுவாமிகளுக்கும் தனது மரியாதையைத் தெரிவித்தார். இது ஒரு தெய்வீக தருணம் என்று குறிப்பிட்ட அவர், அனைவரின் நலனுக்காகவும் பிரார்த்தனை செய்தார். ஸ்வர்ண கலசத்துடன் புதிதாக புனரமைக்கப்பட்ட சிவாஜி கோபுரம் (வடக்கு) பற்றியும் பேசினார். பின்னர் காசி ஜங்கம்வாடி பீடத்தின் சுவாமிகள், ஸ்ரீ புஷ்பகிரி சுவாமிகள் மற்றும் ஸ்ரீசைல பீட சுவாமிகள், இது போன்ற தெய்வீக நிகழ்வின் முக்கியத்துவம், அனைத்து ராஜகோபுரங்களுக்கும் ஸ்வர்ணகலசத்துடன் கும்பாபிஷேகம் செய்ததன் முக்கியத்துவம் குறித்துப் பேசினர். இதையெல்லாம் குறுகிய காலத்தில் தயார் செய்த அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் குழுவினரின் முயற்சியைப் பாராட்டினர்.

ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகள் தமது அனுக்ரஹ பாஷனத்தை குருபரம்பரை மற்றும் ஸ்ரீப்ரமராம்பா சமேத ஸ்ரீமல்லிகார்ஜுன சுவாமியை ப்ரார்தித்து தொடங்கினார். மொழி, பிரதேசங்கள், கலாச்சாரங்கள், மரபுகள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் போன்றவற்றில் பன்முகத்தன்மை கொண்ட நமது நாட்டை மக்களை ஒருங்கிணைத்தது தர்மம் என்று தனது உரையில் கூறினார். அக்காலத்தில் ஜகத்குரு ஸ்ரீஆதி சங்கராச்சாரியார் எவ்வாறு ஸ்ரீசைலத்திற்கு யாத்திரை செய்து, அங்கு காடுகளில் எப்படி தவம் செய்திருப்பார் என்று ஆச்சரியப்பட்டார். 1933 ஆம் ஆண்டு ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமிகள் வருகை தந்ததையும், இப்பகுதியில் உள்ள செஞ்சு பழங்குடியினர் ஆசார்யாளுக்கு சிறப்பான வரவேற்பு அளித்ததையும், 1967ல் ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமிகள் மற்றும் பூஜ்யஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் இருவரும் பாத யாத்திரையாக ஸ்ரீசைலம் வந்ததையும் நினைவு கூர்ந்தார். ஆந்த்ர தேசமானது திரிலிங்க க்ஷேத்ரம் எனவும் வேத தர்மம், பக்தி, கலாச்சாரம் மற்றும் கலைகள் இப்பகுதியின் தனிச்சிறப்பாகும் என கூறினார்கள். அர்ஜுன வ்ருக்ஷத்தைப் பற்றி கூறிய ஸ்ரீசரணர்,

மல்லிகார்ஜுனம் மற்றும் தமிழகத்தில் உள்ள, மத்யார்ஜுனம் எனும் கும்பகோணம் சமீபத்திலுள்ள திரு இடைமருதூர் - புடார்ஜுனம் எனும் திருநெல்வேலி சமீபத்திலுள்ள திருப்புடைமருதூர் ஆகிய க்ஷேத்திரங்களைப் பற்றியும் விளக்கினார். கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு அறநிலையத்துறை அமைச்சர் தலைமையிலான ஸ்ரீசைல தேவஸ்தானத்தின் முயற்சிகளைப் பாராட்டிய அவர், ஈஸ்வர பக்திக்கு அழைப்பு விடுத்து, அனைவரின் நலனுக்காகவும் பிரார்த்தனை செய்தார். அனைத்து முக்கிய பிரமுகர்களுக்கும் சாத்ரா மற்றும் பிரசாதம் வழங்கி அனுக்ரஹித்தார்கள். ஸ்ரீவீரையா, ஸ்ரீமார்க்கண்டேய சாஸ்திரி மற்றும் ஸ்ரீபூர்ணாநந்த ஆராத்யுலு ஆகியோருக்கு சிறப்பு மரியாதை செய்யப்பட்டது. ஆந்த்ர ப்ரதேச அறநிலையத்துறையின் ஆகம ஆலோசகர் ஸ்ரீசக்ரபாணி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

ஸ்ரீமடத்திற்குத் திரும்பும் முன் வேத பண்டிதர்களுக்கும் மற்ற பக்தர்களுக்கும் பிரசாதங்களை வழங்கினார். மந்திரி, ஆணையர் மற்றும் செயல் அலுவலர் மற்றும் பிற அதிகாரிகள் ஸ்ரீமடத்திற்கு ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகளுடன் சென்று, ஆசி பெற்று விடைபெற்றனர்.

**பிப் 27** - முன்னாள் இரவு புனித யாத்திரை முடித்து அலகட்டா ஸ்ரீ காயத்ரி தேவி திருக்கோவில முகாமிற்கு எழுந்தருளினார்கள். முகாமிற்கு வருகை தந்த போது குழுமியிருந்த பக்தர்களிடையே அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள். காலை ஸ்ரீ சந்திரமௌலிஸ்வரர் பூஜை முடிந்து பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் அளித்து அருளாசி வழங்கினார்கள். பிரம்மசாரி குழந்தைகளின் லஹூ சகஸ்ர காயத்ரி ஜபம், தம்பதிகளின் காயத்ரிதேவி ஆராதனா, திருமண வயதுள்ள ஆண், பெண் குழந்தைகளுக்கான ஸ்வயம்வரகலா பார்வதி ஸ்லோக படனமும் அடுத்த நாளில் நடைபெற்றது.

**மார்ச் 2** - பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வோன்டிமிட்டா பகுதியில் உள்ள ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோவிலுக்கு விஜயம் செய்தார்கள். திருக்கோவில் சந்நிதிகளில் பூஜைகள் முடித்து பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் திருக்கோவில் சுவர்கள் மற்றும் தூண்களில் செதுக்கப்பட்டுள்ள நுண் கலைகளை கூர்ந்து கவனித்தார்கள்.

தொடர்ந்து கடப்பாவில் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் திருக்கோவிலுக்கு விஜயம் செய்தார்கள்.

**மார்ச் 3 -** இன்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 66வது பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஆராதனை நிகழ்வுகள் ஸ்ரீ மடம் முகாம் திருப்பதியில் நடந்தேறியது.

**மார்ச் 5 -** பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் திருப்பதி தேசிய ஸம்ஸ்க்ருத சர்வகலா சாலை இடத்தில் அத்வைத தத்வத்திற்காக புதிதாக கட்டடப்படவுள்ள கட்டிடத்திற்காக பூமி பூஜையில் கலந்துகொண்டு ஆசிர்வதித்தார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் சர்வகலா சாலைக்கு வருகை தந்தபோது துணை வேந்தர் பேராசிரியர் GSR கிருஷ்ணமூர்த்தி சுவாமிகளுக்கு பூர்ண கும்பம் அளித்தார். அது சமயம் குழுமியிருந்த பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள். அநேக விற்பன்னர்கள், மாணவர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள்.

**மார்ச் 7 -** இன்று பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் ஜெயந்தி மஹோத்சவம்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் முன்னிலையில் நடைபெற்ற ஹோமங்களின் பூர்ணாஹுதிக்கு பிறகு கலச தீர்த்தங்களால் பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளுக்கு அபிஷேகம் செய்விக்கப்பட்டது. காஞ்சிபுரம் மற்றும் தண்டலத்திலிருந்தும் வரப்பெற்ற கலச தீர்த்தங்களும் அபிஷேகம் செய்யப்பட்டன.

தொடர்ந்து திருமலை-திருப்பதி தேவஸ்தானத்திருந்து ஸ்ரீ வெங்கடேச சுவாமி பிரசாதம், காஞ்சி காமாக்ஷி அம்பாள் பிரசாதம், ஸ்ரீ ஏகாம்பரேஸ்வர சுவாமி பிரசாதம், திருச்சி திருவானைக்கோவில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி தேவஸ்தான பிரசாதம், தஞ்சாவூர் ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்பாள் பிரசாதம் மற்றும் பல்வேறு திருக்கோவில்களின் பிரசாதங்களும் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுக்கு வழங்கப்பட்டன.

பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் 56வது ஜெயந்தி மஹோத்சவ சமயம், பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளாலும், அயோத்தி பூஜ்ய ஸ்ரீ பெஜாவர் சுவாமிகளாலும் ஸ்ரீராம கார்யம் புஸ்தகம் வெளியிடப்பட்டது.

**மார்ச் 8 -** பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஸ்ரீ பிஷ்வேஸ்வர சுவாமிக்கு சிவபஞ்சாக்ஷர நக்ஷத்ரமால வில்வ அர்ச்சனை செய்வித்தார்கள்.

**மார்ச் 10 -** காஞ்சி காமகோடி பீட ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ மஹா தேவேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் ஆராதனை மஹோத்ஸவம் திருப்பதி ஸ்ரீ மடம் முகாமில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் முன்னிலையில் நடைபெற்றது.

பூஜ்ய ஸ்ரீ மஹா தேவேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் கலவையில் 1907-ம் ஆண்டு பிரபவ வருடம் பால்குண மாதம் சுக்லபக்ஷ பிரதமையில் முக்தியடைந்தார்கள்.

**மார்ச்** 16 - பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் திருமலையில் ஸ்ரீ வேங்கடேச சுவாமி தேவஸ்தானத்திற்கு விஜயம் செய்தார்கள்.

**மார்ச்** 17 - இன்று முகாமில் காலை பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி ஒருங்கிணைந்த ஸ்மார்த்த பாடசாலை வித்யார்த்திகளின் ஸ்ரீ அருண பிரஸ்ன பாராயணமும் தொடர்ந்து சூர்ய நமஸ்காரமும் நடைபெற்றன.

**மார்ச்** 20 - திருப்பதி முகாமில் மூன்று கால ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜை முடித்து பிற்பகல் காஞ்சிபுரம் புறப்பட்டார்கள். இரண்டாண்டு கால நீண்ட விஜய யாத்திரையில் ஆந்திர மாநிலம், தெலுங்கானா, மஹாராஷ்ட்ரா, மத்யபிரதேஷ், உத்திரபிரதேஷ் ஆகிய பகுதிகளுக்கும், காசி கங்கை கரையில் மூன்று மாத சாதுர்மாஸ்யத்தையும், பல்வேறு திருக்கோவில் கும்பாபிஷேகங்களை அனுக்ரஹித்து, வரலாற்று சிறப்புமிக்க அயோத்தி ராமர் கோவில் ப்ராண பிரதிஷ்டை நிகழ்வு, தேசத்தின் பல பகுதிகளிலும் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜையுடனும், சம்பாஷணத்தின் மூலமும், அனுக்ரஹபாஷணத்தின் மூலமாகவும், கல்வியாளர்கள், சாதாரண ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் சனாதன தர்மத்தை போஷிப்பதால் அனைத்து மக்களின் க்ஷேமத்திற்காகத்தான் என்ற செய்தியை பரப்பிச் செய்தார்கள்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் இரண்டாண்டு கால விஜய யாத்திரை ராமேஸ்வரத்திலிருந்து காசி, அயோத்யா வரை உள்ள பகுதிகளுக்கு சென்று முடித்து காஞ்சிபுரம் மாலை 6.00 மணியளவில் வந்து சேர்ந்தார்கள். காஞ்சிரபும் எல்லைப்பகுதிகளில் ஒன்றான சர்வதீர்த்த குளக்கரையில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுக்கு ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம், ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் தேவஸ்தானம் மற்றும் பல்வேறு திருக்கோவில் பிரசாதங்களுடன் வேத கோஷங்கள், மங்கள வாத்யங்கள் முழங்க பூர்ண கும்பம் சமர்ப்பித்து வரவேற்கப்பட்டார்கள். தொடர்ந்து ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் வேத கோஷங்கள், மங்கள வாத்யங்களுடன ஊர்வலமாக ஸ்ரீ மடத்திற்கு பக்தர்கள் கூட்டத்துடன் அழைத்து வரப்பட்டார்கள்.

விஜய யாத்திரையின் முடிவாக ஸ்ரீ மடத்தில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அனுக்ஞ கணபதி சந்நிதி, ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாள் சந்நிதி, பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர

சரஸ்வதி மஹா சுவாமிகள் பிருந்தாவனம் மற்றும் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் பிருந்தாவனம் ஆகியவற்றில் விசேஷ பூஜை மற்றும் தீபாராதனைகள் செய்வித்தார்கள்.

**மார்ச்** 22 - பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் ஆராதனை மஹோத்ஸவம்:

காஞ்சிபுரம் சங்கர மடத்தில் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் முன்னிலையில் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் ஆராதனை மஹோத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆராதனை 32 பிராமணர்கள் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில் குளத்தில் ஸ்நானம் செய்வித்து மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக ஸ்ரீ மடத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். ஸ்ரீ ருத்ர பாராயணம் ஹோமங்கள் நடைபெற்று பூர்ணாஹூதி முடிந்தவுடன் பிருந்தாவனத்தில் விசேஷ அபிஷேகம் நடைபெற்றது. சங்கீத வித்வான்கள் மற்று விதூஷிகளால் காலை சிறப்பு கோஷ்டிகாணம் நடைபெற்றது. விசேஷ தீபாரதனைகள் நடைபெற்றது. மதியம் 2.30 மணியளவில் தீர்த்த நாராயண பூஜை முடிந்தவுடன் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பக்தர்களுக்கு தன்னுடைய திருக்கரங்களால் அட்சதையினை விநியோகித்தார்கள். ஆராதனையில் ஸ்ரீ கோவிந்த தேவ் கிரி மஹராஜ், காசி ராஜா மற்றும் ஸ்ரீ மடத்தின் பக்தர்கள் திரளாக இந்த வைபவத்தில் கலந்து கொண்டு ஆச்சாரியர்களின் ஆசியினைப் பெற்றனர். பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

மாலை தங்க தேரில் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் திருவுருவப் படம் ராஜ வீதியில் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டது. மாலை ஸ்ரீ மடத்தில் விசேஷ கச்சேரி நடைபெற்றது.

தொடர்ந்து ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளால் ஸ்ரீ சந்திரமௌலிஸ்வர பூஜை நடைபெற்று வருகிறது.

(தொடரும்)

# சித்திரை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 17-04-2024 | புதன் | ஸ்ரீராம நவமி |
| 19-04-2024 | வெள்ளி | ஏகாதசி |
| 20-04-2024 | சனி | த்வாதசி |
| 21-04-2024 | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை |
| 23-04-2024 | செவ்வாய் | சித்ரா பூர்ணிமா |
| 24-04-2024 | புதன் | ஸ்வாதி வேத பாராயணம் |
| 26-04-2024 | வெள்ளி | அனுஷம் தேர் ; அனுஷம் வேத பாராயணம் |
| 25-04-2024 | ஞாயிறு | மூலம் தேர் ; மூலம் வேத பாராயணம் |
| 30-04-2024 | செவ்வாய் | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| 02-05-2024 | வியாழன் | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| 04-05-2024 | சனி | ஏகாதசி |
| 05-05-2024 | ஞாயிறு | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| 10-05-2024 | வெள்ளி | அக்ஷயத்ரிதீயை |
| 12-05-2024 | ஞாயிறு | ஸ்ரீ ஸங்கர ஜயந்தீ |
| 19-04-2024; 26-04-2024 ; 03-05-2024; 10-05-2024<br>வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரி<br>சமேத ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை | | |

# நாம ராமாயணம்

இந்த நாம ராமாயணம் 108 வாக்யங்களைக் கொண்டது. ராமாயணம் முழுவதையும் அழகாகக் கோர்த்து எழுதப்பட்டுள்ளது. துளஸீ தாஸரால் எழுதப்பட்டது. அனைவரும் பாராயணம் செய்வது நலம். குழந்தைகளுக்கு ஓதுவித்தல் அதனினும் நலம். தினம் எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களால் பாடப்பட்ட இந்த ஸங்கீர்த்தனத்தை கேட்டல் நலம். ஒவ்வொரு வாக்யத்திற்கும் பின் நான் சரணடைகிறேன் என்று சேர்த்து கொள்ளவும்.

## பாலகாண்டம்

**शुद्दब्रह्म परातपर राम्**
**कालात्मक पार्मेश्वरराम्**
**शेश्तल्प सुकनिद्रित राम्**
**ब्रह्मद्यमर प्रार्तित राम्**
**चन्डकिरण कुल मण्ड्त्त राम्**
**स्त्रीमत् दशरथ नन्दन राम्**
**कौसल्या सुखवर्धन राम्**
**विश्वामित्र प्रिय धन राम्**
**घोर ताडक घातकराम्**
**मरीचादि निपातित राम्**



**कौशिक मख रक्षकराम्**
**सुरवरमुनिवर गण सम्स्तुत राम्**
**नाविक धावित म्रुदुपद राम्**
**मिथिलापुरी जन मोहक राम्**
**विदेह मानस रन्जक राम्**
**त्रयम्बक कार्मुख बनजक राम्**
**सीतार्प्पित वर मालिक राम्**
**क्रुत वैवाहिक कौथुक राम्**
**भार्गव दर्प विनाशक राम्**
**स्त्रीमदयोध्या पालक राम्**

## राम राम जय राजा राम् राम राम जय सीथा राम्

### அட்டைப்பட விளக்கம் 'ராம துன்'

*இப்பாடலை பலதடவை நாம் கேட்டிருக்கிறோம். அதே பாடல் வேறுவிதமாக இருப்பதைப் பார்க்கவும். இது தான் அசல். பண்டிட் லக்ஷ்மணாசார்யார் அவர்களால் இயற்றப்பட்டது. அரசியல் காரணமாக காந்தியால் மாற்றப்பட்டு ப்ரபலமானது. 'ராம் துன்' என்று அதன் பெயர். பாடலைப் பார்ப்போம்.*

**ரகுபதி ராகவ ராஜா ராம் பதித பாவன ஸீதா ராம்**
**ஸுந்தர விக்ரஹ மேக ஷ்யாம் கங்கா துலஸீ சாலக்ராம்**
**பத்ர கிரீஷ்வர ஸீதா ராம் பக்தஜனப்ரிய ஸீதா ராம்**
**ஜானகீ ரமண ஸீதா ராம் ஜய ஜய ராகவ ஸீதா ராம்**

# பால காண்டம்

**சுத்தப் ப்ரம்ம பராத்பர ராம்**

*சுத்த ப்ரம்ம பராத்மனை ராமனை*

**காலாத்மக பரமேஸ்வர ராம்**

*பரமேஸ்வரரான காலாமாயிருக்கும் ராமனை*

**ஸேஷதல்ப ஸுக நித்ரித ராம்**

*ஆதிசேஷன் மீது துயிலிலிருக்கும் ராமனை*

**ப்ரஹ்மாத்யமர ப்ரார்த்தித ராம்**

*ப்ரம்மா முதல் தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்ட ராமனை*

**சண்டகிரண குல மண்டித ராம்**

*ஸூர்ய குலத்தை அலங்கரித்த ராமனை*

**ஸ்ரீமத் தசரத நந்தன ராம்**

*தசரத அரசனை சுகப்படுத்திய ராமனை*

**கௌஸல்யா ஸுக வர்தன ராம்**

*கௌஸல்யையின் சுகத்தை வளர்த்த ராமனை*

**விஸ்வாமித்ர ப்ரியதன ராம்**

*விஸ்வாமித்ரரின் அன்புக்குப் பாத்ரமான ராமனை*

**கோர தாடக காதக ராம்**

*கோரமான தாடகையைக் கொன்ற ராமனை*

**மாரீசாதி நிபாதக ராம்**

*மாரீசர் முதலோரை தோற்கடித்த ராமனை*

**கௌஸிக மக ஸம்ரக்ஷக ராம்**

*விசாமித்ரரின் யாகத்தை ரக்ஷித்த ராமனை*

**ஸுரமுனிவர கண ஸம்ஸ்துத ராம்**

*தேவர்கள் முனிவர்களால் புகழப்பட்ட ராமனை*

**நாவிக தாவித ம்ருதுத ராம்**

*படகோட்டியினால் அலம்பப்பட்ட மென் பாதங்களை உடைய ராமனை*

**மிதிலாபுரி ஜன மோஹக ராம்**

*மிதிலை ஜனங்களால் மோகிக்கப்பட்ட ராமனை*

**விதேஹ மானஸ ரஞ்சக ராம்**

*விதேக மன்னன் ஜனகரின் மனத்தை கவர்ந்த ராமனை*

**த்ரயம்பக கார்முக பஞ்சக ராம்**

*ஸிவ தனுஸை முறித்த ராமனை*

**ஸீதார்ப்பித வர மாலிக ராம்**

*ஸீதையால் அர்ப்பிக்கப்பட்ட மாலையை அணிந்த ராமனை*

**கர்தவைவாஹிக கௌதுக ராம்**

*விவாஹத்தை செய்து கொள்ள ஆவலாயிருந்த ராமனை*

**பார்க்கவ தர்ப்ப வினாசக ராம்**

*பரசுராமரின் ஆணவத்தை நாசம் செய்த ராமனை*

**ஸ்ரீமதயோத்யா பாலக ராம்**

*அயோத்தியை பாலனம் செய்த ராமனை நான் சரணடைகிறேன்.*

**ராம ராம ஜய ராஜா ராம் ராம ராம ஜய ஸீதா ராம்**




# அத்வைத ஆச்சார்ய ரம்பரை 18

## ஸ்ரீ தோடகாசாரியர்

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரின் அத்யந்த ப்ரீதிக்குப் பாத்திரமான குருபக்திக்கு எடுத்துகாட்டாக விளங்கிய சீடர் தோடகாசாரியர். இவரது இயற்பெயர் கிரி. இவரது தந்தைபெயர் விச்வநாத அத்வரி. இவர் மிகப்பெரிய அறிவு ஜீவியாக இல்லாவிட்டாலும்கூட குரு அனுகிரகத்தால் அறிவு ஜீவிகளை வியக்கச்செய்யும் ஞானம் பெற்றவரானார். வடதிசையில் பத்ரிகாச்ரமத்தில் நிறுவப்பட்ட ஜ்யோதிர் மடத்திற்கு இவரை முதல் பீடாதிபதியாக நியமித்ததாக வரலாறு கூறுகிறது. காசியில் தங்கியிருந்து பாடம் சொல்லிய காலத்திலும் திக்விஜய காலத்திலும், ஆங்காங்கே தங்கி பாஷ்ய பாடம் சொல்லிய நாட்களிலும் ஸ்ரீ ஆதிசங்கரர் தோடகாசாரியருக்கு மிகவும் முக்கியத்துவம் அளித்தார். சில நாட்கள் தோடகாசாரியர் பாடத்திற்கு வரத் தாமதமானால் பகவத் பாதர் காத்திருந்து வந்த பிறகே பாடம் துவங்குவார்.

ஸ்ரீ ஆசார்யர் தோடகாசாரியார்க்குக் கொடுக்கும் முக்கியத்துவம் கண்டு பொறாமை கொண்ட சில சீடர்கள் ஸ்ரீ ஆசார்யரிடம் தோடகாச்சார்யருக்காகக் காத்திருக்க தேவையில்லை. அவர் என்ன உயர்ந்த ஞானம் பெற்றவரா எனக்கூறி வேண்டினர். தன் அத்யந்த சீடரின் பெருமையை உலகறியச் செய்ய விரும்பி கண் மூடி தியானித்தார். அடுத்த சில நிமிடங்களில் தோடகாசார்யர் ஆனந்தக் களிப்பில் ஸமாதியிலிருந்து எழுந்து தோடகாஷ்டகம் பாடிக் கொண்டு குதித்துக் கொண்டே வந்தார். தோடக விருத்தத்தில் அமைந்த அந்த எட்டு சுலோகங்களும் சந்த நயமும் அர்த்த புஷ்டியும் நிரம்பி அனைவரையும் ஈர்த்தன. அங்கு கூடியிருந்த அனைவரும் தோடகாஷ்டகத்தின் அதிர்வலைகளில் மெய்மறந்தனர். ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதரின் திருவடித் தாமரைகளின் திரும்பத் திரும்ப விழுந்து நமஸ்கரித்தனர். சீடரான கிரியும் இந்நிகழ்ச்சி நடைபெற்றது முதற்கொண்டு தோடகாச்சார்யர் என்றே அழைக்கப்பட்டார். ஸ்ரீ ஆச்சார்யருடன் சேர்த்து வைத்து போற்றப்பட்டார். இன்றளவும் தோடகாஷ்டகம் தினசரி எல்லா ப்ராசீன சங்கர மடங்களிலும் சொல்லி நமஸ்கரிக்கப்படுகிறது.

அத்வைத வேதாந்தஸாரமாக 179 சுலோகங்களில் தோடகாசார்யர் **ஸ்ருதிஸார ஸமுத்தரணம்** என்ற ஒரு நூலை இதே தோடக விருத்தத்தில் எழுதி வேதாந்தத்தை

பரப்பி உள்ளார். நிவேதனம் என்ற பெயரிலும் இந்நூல் வழங்கப்படுகிறது. ஸச்சிதானந்த என்பவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். 'ஸம்பந்தோக்தி' என்ற பெயரில் ஒரு உரை காணப்படுகிறது. ஆனால் இதன் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. வாயுதேவனின் அம்சமாக அவதரித்தவர் ஹஸ்தாமலகர் என்றும், பகவான் நாராயணரின் அம்சமாக அவதரித்தவர் பத்மபாதர் என்றும் கருதப்படுவது போல் தோடகாசார்யர் அக்னிதேவனின் அம்சமாக கருதப்படுகிறார்.

மாறாத, சலனமற்ற குருபத்தி இருந்தால் எல்லா சாஸ்திர ஞானமும் தானே நெஞ்சில் ஸ்புரிக்கும் என்பது இவரது கருத்து. இவர் வாழ்வும் வாக்குமே இதற்குச் சான்று. இவரது இரு நூல்களுமே ஸமாதி பாஷா அனுபுதியில் பொல பொல வென்று தானே ஞானகிரியிலிருந்து கொட்டும் அருவி. இவ்விரு நூல்களையும் படிப்போர் இதனை நன்கு உணர முடியும். கேவல புத்தக அறிவிலிருந்து எழுந்தவை அல்ல இந்நூல்கள். ஸுரேஸ்வரர், பத்மபாதர் போன்றோருக்குச் சமமான சாஸ்திர ஞானம் பெறாதவராயிருக்கலாம், ஆனால் குருகிருபை இவருக்கு சாஸ்திர ஞானத்தையும் அனுபவ ஞானத்தையும் ஒரு சேர அருளியது. ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதருக்குப் பற்பல பணிவிடைகள் அயராது செய்ததன் மூலமே இந்த ஞானத்தைப் பெற்றார் என்றால் மிகையாகாது.

இவரது **'ஸ்ருதி ஸார ஸமுத்தரணம்'** என்ற நூல் ஜீவப்ரஹ்ம ஐக்யம் பற்றி அனுபவ பூர்வமான விளக்கங்களுடன் இருப்பதால், சாஸ்திர ஞானத்தை இவற்றுடன் உரைத்துப் பார்க்கலாம். அவற்றின் ஸத்யத் தன்மையையும் எளிதில் உணரலாம். ஜீவப்ரஹ்ம ஐக்ய அனுபூதி நிஷ்டைக்கு ஆதர்சமாகத் திகழ்ந்த ஆசார்யர் ஸ்ரீ சங்கரர் ஸந்நிதியில் வெளியிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதே இதன் பெருமைக்குச் சான்று. இது ஒரு ஜீவன் முக்தனின் அனுபவக் கையேடு.

அன்னமயகோசம், ப்ராண மயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்த மயகோசம், ஆகிய ஐந்து கோசங்களால் மறைக்கப்பட்டிருக்கும் தன்னை இந்த ஐந்திலிருந்தும் விடுவித்துக் கொண்டு தன்னில் தான் நிலை பெற்றிருத்தலே உண்மையான ஞானம் என்கிறார்.

விழிப்பு நிலை, கனவு நிலை, உறக்க நிலை ஆகிய மூன்று நிலைகளுக்கும் ஆதாரமாக இருப்பதும், மூன்று நிலைகளிலும் பெறப்படும் அனுபவங்களுக்கு சாக்ஷியாக இருப்பதும், ஆனால் தான் எந்தவொன்றுடனும் ஈஷிக்கொள்ளாமலிருப்பதும், மூன்று நிலைகளையும் பிரகாசப்படுத்திக் கொண்டிருப்பதுமான ஆத்ம சொரூபம் 'நான்' 'நான்' என்று ஒவ்வொரு உயிரினிடத்தும் ஸ்புரித்துக் கொண்டிருக்கிறது. இதனை

விசாரத்தால் அனுபவத்தில் உணர்ந்து நானுக்கும் நானாயிருக்கும் நிஜமான நானில் நான் நானாகி நிற்பதே முக்திநிலை. இதுவே துரீயம் எனப்படும் நான்காவது நிலை.

இந்நிலையில் அஹமாகிற 'த்வம்' எனப்படும் ஜீவன் 'தத்' ஆகிற ப்ரஹ்மமாகவேதான் இருக்கிறோம் என்பதை உணர்கிறான். இது காலம், தேசம், புருஷன் என்ற வ்யக்திகளைக் கடந்ததாக இருக்கிறது. நாமரூபாத்மகமான பிரபஞ்சம் காட்டிலும் ஆத்மதத்துவத்தைக் அன்னியமாக இல்லை. காணும் போது நாமரூபங்களுடன் தோன்றக் காரணம் ஸதஸத்விலக்ஷணமான மாயைதான்.

இவையாகவும் கேவல புத்தக அறிவின் வெளிப்பாடாக இல்லாமல் அனுபவ ஞானத்தின் வெளிப்பாடாக இருப்பதால், இவரது இருநூல்களும் பக்தியையும் ஞானத்தையும் பிரகாசப்படுத்தும் கைவிளக்குகளாக இருக்கின்றன.

இவரது தோடகாஷ்டகத்தைக் கூறி தினசரி ஸ்ரீ ஆச்சார்யாளை பக்தியுடன் நமஸ்கரித்து வந்தால் அதி விரைவில் அத்வைத வேதாந்த விஞ்ஞானம் அறிவுக்குப் புலப்படும் என்பது ஆன்றோர்களின் முடிவு.

**விதி³தாகில ஸாஸ்த்ரஸுதாஜலதே⁴**
**மஹிதோபநிஷத் கதி²தார்த்த நிதே⁴ ॥**
**ஹ்ருத³யே கலயே விமலம் சரணம்**
**பவ ஸங்கரதேஸிகமே ஸரணம் ॥**

மரணமிலாப் பெருவாழ்வளிக்கும் அமுதப்பெருக்கான சாஸ்திரக் கடலை முழுமையாயறிந்தவரே. உபநிஷத்துக்களின் தத்துவப்பொருளை உள்ளபடி உரைத்த தத்வநிதியே, தாங்களே எனக்கு ஒரே புகலிடம். தங்கள் திருவடித்தாமரைகளையே எப்போதும் மனதில் இருத்தி வழிபடுகிறேன். ஸ்ரீ சங்கர குருவே! தங்களைச் சரணடைகிறேன்.

**கருணா வருணாலய பாலயமாம்**
**பவஸாகரதுக்கவி தூநஹ்ருதம்**
**ரசயாகில தர்சன தத்வ விதம்**
**பவ ஸங்கரதேஸிகமே ஸரணம் ॥**

கருணைக்கடலே! பிறவிப்பெருங்கடலில் விழுந்து துக்கத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் என்னை கரையேற்றுவீராக. எல்லா தர்சனங்களின் உண்மைப் பொருளும் உள்ளபடி உணருமாறு அருள்வீராக. ஸ்ரீ சங்கர குருவே! தங்களைச் சரணடைகிறேன்.

# சாணக்ய ஸுபாஷிதம்

**நல்லவை**

**ஏகேனாபி ஸுபுத்ரேண வித்யாயுக்த ஸாதுனா**

**ஆஹ்லாதிதம் குலம் ஸர்வம் யதா சந்த்ரேண ஸர்வரீ ॥**

*ஒரே புத்ரன் கல்விமானாகவும், ஸாதுவாகவும் இருப்பின் இரவு சந்த்ரிகையால் மகிழ்வது போல் குலம் முழுவதும் மகிழும்.*

**தூண்**

**கிம் ஜாதைர் பஹுபி: புத்ரை சோக ஸந்தாபக காரகை:**

**வரமேக: குலாலம்பீ யத்ர விஸ்ராம்யதே குலம் ॥**

*ஸோகம் தரும் பல பிள்ளைகளால் பயன் என்ன? குடும்பம் எந்த ஒரு நல்ல புத்ரனை அண்டியுள்ளதோ அந்த ஒரு புத்ரன் போதும்.*

**ஒளிரும் புதல்வன்**

**ஏகோபி குணவான் புத்ரோ நிர்குணைச்சைவ சதைர் வர:**

**ஏகஸ்சந்த்ரஸ்தமோ ஹந்தி ந ச தாரா ஸஹஸ்ரஸ: ॥**

*குணமில்லாத பல புத்ரர்களால் என்ன பயன்? குணவானாகிய ஒரே புத்ரன் போதும். ஒரே சந்த்ரன் இருட்டை அழிப்பான். ஆயிரம் தாரா கணங்கள் அல்ல.*

**ஸ்ரமம் நீக்கிகள்**

**ஸம்ஸார தாப தக்தானாம் த்ரயோ விஸ்ராந்தி ஹேதவ:**

**ஆபத்யச்ச கலத்ரன்ச ஸதாம் ஸங்கதிரேவ ச ॥**

*ஸம்சாரத் தாபத்தால் வாடுபவர்களுக்கு இந்த மூன்றும் ஸ்ரமம் நீக்கும். நல்ல புத்ரன், நல்ல மனைவி, நல்லோர்களின் சேர்க்கை.*

**புனிதம்**

**நான்னோதகம் ஸமம் தானம் ந திதிர் த்வாதசீ ஸமா**

**ந காயத்ரியா: பரோ மந்த்ரோ ந மாதுர் தைவதம் பரம் ॥**

*அன்னதானம், உதக, தானம் தானங்களில் புனிதமானவை. திதிகளில் த்வாதசி மந்த்ரங்களில் காயத்ரீ, கடவுள்களில் அன்னை இவை புனிதமானவை.*

**ஜீவனம்**

**தர்மம் தனம் ச தான்யன்ச குரோர்வசனம் ஔஷதம்**

**ஸுக்ருஹீதன்ச கர்த்வ்யம் அன்யதா து ந ஜீவதி ॥**

*அறம், தனம், தான்யம், குருவின் வசனம், மருந்து இவைகளை ஸேமிக்கவும். இவை இல்லாமல் வாழ்க்கை வீண்.*

**அழகு**

**ஸமானே ஸோபதே ப்ரீதி: ராக்கி ஸேவா ஸ சோபதே**

**வாணிஜ்யம் வ்யவாரேஷு ஸ்த்ரீ திவ்யா ஸோபதே க்ருஹே ॥**

*சமமாயுள்ள நண்பர்களின் ப்ரீதி ஸோபிக்கும். அரசனுக்குச் சேவை சோபிக்கும் வேலைகளில் வணிகம் சோபிக்கும். அழகிய பெண்ணால் வீடு சோபிக்கும்.*

**ரக்ஷணம்**

**வித்தேன ரக்ஷ்யதே தர்மோ வித்யா யோகேன ரக்ஷ்யதே**

**ம்ருதுனா ரக்ஷ்யதே பூப: ஸத்ஸ்த்ரியா ரக்ஷ்யதே க்ருஹம் ॥**

*அறம் பணத்தினாலும், கல்வி பயிற்சியினாலும், கண்ணோட்டத்தால் அரசனும், குலஸ்த்ரீனால் வீடும் காக்கப்படும்.*

**மித்ரம்**

**வித்யா மித்ரம் ப்ரவாஸேஷு பார்யா மித்ரம் க்ருஹேஷு ச**

**வ்யாதிதஸ்ய ஔஷதம் மித்ரம் தர்மோ மித்ரம் ம்ருதஸ்ய ச ॥**

*வெளி நாட்டில் ஒருவனுடைய கல்வியும், வீட்டில் மனைவியும், வ்யாதிஸ்தனுக்கு மருந்தும், மரித்தவனுக்கு அவன் செய்த அறமும் நண்பர்கள்.*

**சக்தி**

**பாஹு வீர்யம் பலம் ராக்ய: ப்ராஹ்மணோ ப்ர்ம்மவித் பலீ**

**ரூப யௌவன மாதுர்யம் ஸ்த்ரீணாம் பலமனுத்தமம் ॥**

*கர வீர்யம் அரசனுக்குப் பலம், ப்ரம்மவித்தை ப்ராம்மணனுக்குப் பலம் ரூப யொவன மாதுர்யம் பெண்களுக்கு பலம்.*

*(தொடரும்)*

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

*நரசிம்மய்யர் சுமைதாங்கி*



ஜகத்குரு ஸ்ரீசரணர்களின் ஈர்ப்பு சக்தி அளவிட முடியாதது. அவரிடம் பக்தி வைக்காதவர்கள் கூட அவர் பின் செல்வதை நான் கண்டிருக்கிறேன்.

1979 ஆம் வருடம் கர்நாடக மாநிலம் பெல்காம் நகரில் தாராபூர் தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்தேன். என் இல்லத்தில் சனிக்கிழமை தோறும் நாம ஸங்கீர்த்தனம் நடைபெறுவது வழக்கம்.

அப்போது மகாபெரியவா ஹுப்லியில் முகாமிட்டிருந்தார். அப்போது என் ஸத் ஸங்கத்தினரும் வேறு சில பக்தர்களும் ஸ்வாமிகளை பெல்காமுக்கு அழைத்தோம்.

அவரும் அங்கு வந்து இந்துவாடியில் ரானடே ஹாலில் தங்கியிருந்தார். தினமும் பக்தர்கள் அவரை தர்சித்து பாக்யம் பெற்றார்கள். எனது நண்பர் துரைசாமி, எனக்கு மேல் அதிகாரியும் கூட. ஆஸ்திகத்தில் பற்று இல்லாதவர். ஆசார்யாளை எல்லோரும் நமஸ்கரிக்கின்றனர். நீங்களும் வாருங்கள் என்றேன். முதலில் மறுத்த அவர் வேண்டா வெறுப்பாக ஒரு நாள் என்னுடன் வந்தார். பக்தர்கள் பலர் ஸ்வாமிகளை நமஸ்கரித்து ஆசி பெற்று வந்தனர். இவர் தனியாகப் பட்டும் படாமல் இருந்தார். இவர் படாமல்

இருந்தாலென்ன? ஸ்வாமிகளின் பார்வை இவர் மேல் பட்டது. என்ன மாயமோ! அன்றிலிருந்து இன்று வரை அத்யந்த பக்தராகி விட்டார். மூன்று மாத காலம் பெரியவா பெல்காமில் இருந்த போது அவ்விடத்தில் மாவிலைத் தோரணமும் தென்னகுருத்து தோரணமும் தினமும் மாற்றி பசுமை மாறாமல் வைத்திருந்தார்.

இது பற்றி என்னிடம் பெரியவா ‘ பார் துரைசாமி எப்படி செய்துள்ளான்’ என்று கூறி பாராட்டை பெற்றார். இப்போதும் அவர் வ்யாஸ பூஜையின் போது பொருட்களை வைத்து அனுக்ரஹம் பெற்றுச் செல்கிறார்.

பெல்காமில் பெரியவா இருந்தபோது மௌன நாட்களில் என்னைக் கூப்பிட வேண்டுமென்றால் சிஷ்யர்களிடம் தன் வஸ்த்ரத்தை தலையில் சுற்றி வைத்துக் கொண்டு சுமைதாங்கிக்கு அடையாளமாகக் காட்டுவார். சுமைதாங்கியில் இரண்டு வேதம் படித்தவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் குறிக்க தன் விரல்களை கண்களில் வைத்துக் கொள்வார். அவரது பரி பாஷையே தனி. வேண்டியவர் வேண்டாதவர் என்று எதுவும் கிடையாது. ஜகத் குருவின் புகழ் என்றும் நிலைக்க அவரையே ப்ரார்த்திக்கிறேன்.

*(தொடரும்)*

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தன்மை பூண்டொழுக லான்**

எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டு அன்பை வெளிப்படுத்தி வாழ்வதால் துறவிகள் அந்தணர் (தூய அறிவினாலும், பண்பினாலும் உள்ளத்தைக் குளிர்வித்துக் கொண்டவர்கள்) எனப்படுவர்.

*(குறள் : 20)*

வீட்டையும் சுற்றத்தாரையும் துறந்து, கிடைப்பதை உண்டு கிடைத்த இடத்தில் படுத்து, இந்த்ரியங்களை அடக்கி, ஆசைகளை அறுத்து, எல்லா ஜீவராசிகளையும் சமமாகப் பாவித்து எதையும் விரும்பாமல், எதையும் வெறுக்காமல் வாழும் நிலை ஸந்யாஸம்.

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் த்யாகிராஜாய வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**த்யாகேனைவ பரா சாந்தி: த்யாகேனைவ பரம் ஸுகம் ।**

**ஆத்மஜ்ஞானம் மஹாத்யாக: இதி வேதாந்தபாஸ்கர: ।।**

தியாகத்தினாலேயே பரம சாந்தியும், பரம சுகமும் கிடைக்கிறது. ஆத்மஞானமே உண்மையில் பெரிய தியாகம்.

## 26. தியாகத்திலிருந்தே ஆனந்தம்

**தேன த்யக்தேன புஞ்ஜீதா:** **ஈசாவாஸ்யோபநிஷத் 1**

*தியாகத்தினாலேயே ஆனந்தத்தை அடைய வேண்டும்.*

ஆனந்தம் கிடைப்பதற்காக என்ன செய்ய வேண்டும் ? ஈசாவாஸ்யோபநிஷத் 'தியாகத்தினால் ஆனந்தத்தை அனுபவியுங்கள்'. தியாகத்திலிருந்தே ஆனந்தம் என்று கூறுகிறது. என்ன ? தியாகத்தினால் ஆனந்தமா ? தியாகம் என்ற சொல்லே சிலருக்குப் பயத்தை உண்டாக்குகிறது. தியாகம் என்றால் ''விடக் கூடியது'' என்று அர்த்தம். நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்ததை மற்றவர்க்கு கொடுப்பது கடினம் தான். இதனால் ஆனந்தம் கிடைக்குமா ? தியாகம் செய்பவனுக்கு நஷ்டம், அதைப்பெற்றவனுக்கு ஆனந்தம் உண்டாகலாம். தியாகம் செய்பவனுக்கு துக்கமே உண்டாகிறது. இது சாதாரண மனிதனின் நிலை.

இங்கு கூறப்படும் தியாகம் வெறும் தானம் இல்லை. தான் சம்பாதித்திருக்கும் பொருட்களைப் பிறருக்குக் கொடுப்பது அல்ல. ஆத்ம ஞானமே தியாகம். எல்லாமும் பரமாத்மனே என்கிற விவேகம் உண்டானபின் 'தன்னுடையது' என்று எதுவும் இருக்காது. ஆத்ம ஞானத்தினால் மட்டுமே, 'நான்', 'என்னுடையது' என்ற அறியாமை நீங்குகிறது. இதுவே வேதாந்தத்தில் சொல்லப்படும் தியாகம். குறுகிய மனப்பான்மையை விடுவதே தியாகம், ஆனந்தம்.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# ஆழ்வார்கள் சரித்திரம்

## தொண்டரடிப்பொடி

நமது ஸனாதன தர்மத்தில் பக்தி மார்க்கம் அனைத்து மக்களாலும் கடைபிடிக்கப்படுகிறது. வேதங்கள் நமது தர்மத்திற்கு வேர்களாயிருந்து அனைத்து மக்களுக்கும் புராணங்கள் வாயிலாக தர்மத்தைப் பழமாகக் கொடுத்தன. அதே போல் எண்ணற்ற ஞானிகள் வழியாக ப்ரதேச மொழி மூலமாக தர்மத்தைப் போதித்தன. அதில் தமிழகத்தில் நாயன் மார்கள் மூலம் சைவமும், ஆழ்வார்கள் மூலம் வைணவமும் பரவின. பன்னிரண்டு ஆழ்வார்கள் பக்தி நனி சொட்ட சொட்ட நாலாயிரம் பாக்களைத் தந்துள்ளனர்.

இதை 'உபய வேதாந்தம்' என்று ஸ்ரீ ராமானுஜர் புகழ்வார். ஆழ்வாரே வேதாந்தம் என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். ஆனால் ஆழ்வார்கள் சரித்ரம் பெரிய புராணம் சொல்லுவது போல் கிடைக்கவில்லை. இருப்பினும் அழகிய பெருமாள் ஜீயர் என்பவர் 'ஆறாயிரப்படி குரு பரம்பரா ப்ரபாவம்' என்னும் நூலை அருளியுள்ளார். அதை ஒட்டி பரகால் அயதீந்த்ர ஜீயர் என்பவர் மூவாயிரப்படி குரு பரம்பரா ப்ரபாவம் ' என்னும் நூலை அருளியுள்ளார். இவைகளை ஒட்டி சுருக்கமாக ஆழ்வார்கள் சரித்திரத்தைத் தருகிறேன் .

## பொய்கை ஆழ்வார்

காஞ்சீபுரத்தில் உள்ள திருவெக்கா என்னும் இடத்தில் பிறந்தவர். ஒரு பொய்கையில் பிறந்ததால் பொய்கை ஆழ்வார் என்னும் பெயர். திருமாலின் பாஞ்ச ஜன்ய அம்சமாகத் தோன்றியவர் என்பது ஐதிஹம். துறவறம் பூண்டு திருமாலின் திவ்ய தேசங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தவர்.

## பூதத்தாழ்வார்

கடல் மல்லை என்னும் மாமல்லபுரத்தில் ஜனனம். திருமாலின் கதாயுத அம்சமாகத் தோன்றியவர் என்று ஐதிஹம். திருவரங்கம் திருக்குடந்தை போன்ற தலங்களுக்குச் சென்று நாராயணனை வழிபட்டவர்.

## பேயாழ்வார்

மயிலையில் ஆதி கேசவப் பெருமாள் கோயில் கிணற்றில் அவதரித்தவர். திருமாலின் நந்தகம் என்னும் வாளின் அம்சம் என்பது ஐதீஹம். பக்தி முதிர்ந்த நிலையில் பித்தனைப் போல் நடந்து கொள்வார். அதனாலேயே பேயாழ்வர் என்று திரு நாமம். அவர்கள் வாழ்வில் நடந்த விசித்ர சம்பவம்.

ஊர் ஊராக சென்று திருமாலைப் பாடிக் கொண்டிருந்த அந்த மூவர்கள் வாழ்விலும் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. ஒரு நாள் பொய்கை ஆழ்வார் திருக்கோவலூர் என்னும் ஊருக்குச் சென்றார். அப்போது பலத்த மழை பெய்யத் தொடங்கியது. ஒரு வீட்டின் உள்ளே முன் பகுதியில் அவர் படுத்துக்கொண்டிருக்க அதே நேரத்தில் பூதத்தாழ்வாரும் அங்கே வந்தார். உள்ளே வரலாமா என்று கேட்க பொய்கையாரும் வரச் சொல்ல அவரும் உள்ளே சென்றார். ஒருவர் படுக்க வேண்டிய இடத்தில் இருவர் அமரலாம் என்று இருவரும் அமர்ந்தனர். சற்று நேரத்தில் பேயாழ்வார் எனக்கு அங்கு இடமுண்டா என்று கேட்க மூவரும் நிற்கலாம் என்றனர் அவ்விருவரும். மூவரும் நின்று கொண்டிருக்கையில் அவர்களிடத்தில் யாரோ ஒருவர் புதிதாக வந்ததாக ஓர் உணர்வு. ஸ்ரீயப்பதி அவர்களை ஆட்கொள்ள பொய்கையாழ்வார் **'வையம் தகளியா வார்கடலே நெய்யாக'** என்று தொடங்கினார்.

பூதத்தாழ்வார் **'அன்பே தகளியா ஆர்வமே நெய் ஆக'** என்று தொடங்கினார். பேயாழ்வார்' **'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்'** என்று பாட மூவரும் மூன்று அந்தாதிகளைப் பாடி பரமன் அருள் பெற்றனர் என்பது சரித்திரம். மூன்று முதல் பாசுரங்களப் பார்ப்போம்.

### பொய்கையாழ்வார்

**வையம் தகளியா வார் கடலே நெய் ஆக விய்ய கதிரோன் விளக்காக செய்ய சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை இடர் ஆழி நீங்குகவே என்று**

### பூததாழ்வார்

**'அன்பே தகளியா ஆர்வமே நெய் ஆக இன்பு உருகு சிந்தை இடு திரியா நன்புருகி**

**ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணர்க்கு ண்ஜ்யானத் தமிழ் புரிந்த நான்''**

### பேயாழ்வார்

**திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும் அருக்கன் அணி நிறமும்கண்டேன்**

**செருக்கிளரும் பொன் ஆழி கண்டேன் புரி சங்கம் கைக்கண்டேன் என் ஆழி வண்ணன் பால் இன்று.**

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

## மஹா ப்ரஸ்தானிக பர்வம்

*ஜய விஜயா*

யாதவர்களும் வ்ருஷ்ணி குலமும் அழிந்தது கேட்ட யுதிஷ்டிரர் தன் ராஜ்ய பாரத்தை யுத்ஸுவிற்கு அளித்தார். பரீக்ஷித்தை அரசனாக அபிஷேகம் செய்தபின் வனம் செல்வதற்காக மர உரி தரித்தார். அவரது தம்பிகளும் மனம் உகந்து மர உரி தரித்தனர். ஐந்து பேரும் த்ரௌபதியுடன் ஆறு பேராக, அவர்களுடன் ஒரு நாயும் சேர்ந்து எழுவராக ஹஸ்தினாபுரம் விட்டு விலகினர்.

யோகாத்மாக்களாக மேரு மலையை அடைந்தனர். முதலில் யோகத்தை விட்டவளான த்ரௌபதி கீழே விழுந்தாள். ஏன் அவள் விழுந்தாள் என்று கேட்க யுதிஷ்டிரர் அவளுக்கு அர்ஜுனன் மேல் பார பக்ஷம் உண்டு அதனால் விழுந்தாள் என்றார்.

இரண்டாவதாக ஸஹாதேவன் விழ இவன் ஏன் விழுந்தான் என்று பீமன் கேட்க தனக்கு சமமாக படிப்பில் யாருமில்லை என்னும் ஆணவத்தால் விழுந்தான் என்றார்.



மூன்றாவதாக நகுலன் விழ ஏன் என்று பீமன் வினவ தன்னைவிட அழகில் யாருமில்லை என்ற ஆணவத்தால் வீழ்ந்தான் என்றார்.

பின்பு அர்ஜுனன் விழ இது ஏன் என்று பீமன் வினவ 'நான் ஒருவனே

சத்ருக்களை பொசுக்குவேன் என்று சூளுரைத்தவன் அம்மாதிரி செய்யவில்லை' அதனால் விழுந்தான் என்றார்.

அதன் பின் பீமனும் விழ, அவனும் ப்ரபு நானும் விழுந்து விட்டேன் ஏன் என்று வினவ அதி போஜனம் செய்பவன் நீ. அதனால் பெருமை கொள்பவன் நீ. அதனால் விழுந்தாய் என்று கூறிவிட்டு அவனைப் பார்க்காமல் யுதிஷ்டிரர் செல்ல நாய் மட்டும் அவரை பின் தொடர்ந்தது.

அப்பொழுது பெரும் சப்தத்துடன் பூமி அதிர இந்த்ரன் தேரில் வந்து இறங்கினான். இந்த்ரன் தர்ம புத்ர! உனது பூலோக கார்யம் முடிந்தது. ஸ்வர்கம் வா.

**யுதிஷ்டிரர்** தேவேந்த்ரனே என்னுடைய தம்பிகளில்லாமல் ஸ்வர்கம் வர இசையேன். த்ரௌபதி இல்லாமலும் வர இசையேன்.

**இந்த்ரன்** அரசே அவர்கள் அனைவரும் பூத உடலை விட்டு ஸ்வர்கம் சென்று விட்டனர். இவ்வுடலுடன் நீ ஸ்வர்கம் செல்லலாம்.

**யுதிஷ்டிரர்** காலமறிந்தவனே ! இந்த நாய் எங்களுடனே தொடர்ந்து வந்துள்ளது. அதையும் ஸ்வர்க்கத்திற்கு அனுமதிக்க வேண்டும்.

**இந்த்ரன்** தர்மரே! இப்போது நீர் அமரத்வத்தையும், எனக்கு ஸமான நிலையையும் செல்வத்தையும் போகத்தையும் பெற்றுள்ளீர். இந்த நாயை விட்டுவிடவும்.

**யுதிஷ்டிரர்** இந்த நாயில்லாமல் எனக்கு அந்த போகங்கள் வேண்டாம்.

**இந்த்ரன்** உன் தம்பிகள், மனைவி இவர்களை விட இந்த நாய்க்கு என்ன மகிமை?

**யுதிஷ்டிரர்** அவர்களுக்கு என்னால் உயிர் தர இயலாது. எனவே அவர்களை விட்டு விட்டேன். அவர்கள் ஜீவிக்கையில் நான் கை விடவில்லை.

அவர் பேசுவதைக் கேட்ட தர்ம தேவதை தர்ம புத்ரன் என்பதை நிரூபித்து விட்டாய். அனைத்து உயிர்களிடத்தும் அன்பு வைத்துள்ளாய். முன்பு த்வைத வனத்தில் நான் வைத்த பரீக்ஷையில் நகுலனை ஜீவிக்க வரம் கேட்டாய்.

இப்போது இந்த நாய்க்காக ஸ்வர்கத்தையும் புறக்கணிக்கிறாய். உனக்கு ஈடாக தேவ லோகத்தில் அரசன் இல்லை. அக்ஷயமான லோகங்கள் அனைத்தும் உனதே. இந்த உடலுடன் ஸ்வர்கம் செல்வாயாக '' என்றது.

விண்ணையும் மண்ணையும் தன் தேஜஸால் நிரப்பி தர்ம புத்ரர் இந்த்ரனின் தேரில் ஏறி ஸ்வர்கம் சென்றார்.

மஹா ப்ரஸ்தானிக பர்வம் முற்றியது

**குணமென்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது**

தெய்விக நற்பண்புகள் எனப்படுகின்ற மலையின்மீது ஏறி, நிலைத்து நிற்கின்ற, அறிவுபூர்வமாகத் துறந்தவர்களுடைய சினமானது ஒரு கணத்தில் தோன்றினாலும் நீண்டநேரம் இருக்கும்படி வைத்துக் கொள்ளுதல் இயலாது. (துறவிகளின் கோபம் தோன்றிய கணத்திலேயே மறைந்து போகும்).

(குறள் : 29)

சான்றோர்களுக்கு கோபம் வந்தால் ஒரு க்ஷணம்தான் இருக்கும். பிறகு போய்விடும். சிலருக்கு இரண்டு மணி நேரம் இருக்கும். கீழோர்க்கு ஒருநாள் முழுதும் கோபம் நீடிக்கும். மஹாபாபிக்கு சாகும்வரை கோபம் இருக்கும்.

(ஶ்ரீமத் பகவத்கீதை : 2- 64)

******

**சுவை ஒளி உறுஓசை நாற்றம்என்று ஐந்தின்**
**வகைதெரிவான் சுட்டே உலகு**

நாவால் அறியப்படும் சுவை, கண்ணால் காணப்படும் காட்சி, தோலால் உணரப்படும் தொடு உணர்ச்சி, காதால் அறியப்படும் ஓசை, மூக்கால் நுகரப்படும் மணம் என வரையறுக்கப்பட்ட ஐம்பொறிகள், ஐம்புலன்கள் ஆகியவற்றின் நுண்மையான தன்மைகளைப் பகுத்தறிந்து உணர்ந்துள்ளவனிடம்தான் உலகப் பொருள்களுக்கும் உயிர்களும் கட்டுப்பட்டு அடங்கி நிற்கும்.

(குறள் : 27)

விருப்பு வெறுப்பற்றனவும், ஆத்ம வசப்பட்டவனவும் ஆகிய இந்த்ரியங்களால் விஷயங்களில் உலவுகின்ற மனவேந்தன் மனத்தெளிவடைகிறான்.

(ஶ்ரீமத் பகவத்கீதை : 2- 64)

# மூக ஸாரம்

இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த ஸ்ரீ மூக கவியினால் இயற்றப்பட்ட மூக பஞ்சசதியை எல்லாரும் அறிவர். காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது மூக பஞ்சசதி. அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை ‘மூக ஸாரம்‘ என்னும் தலைப்பில் மறைந்த ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன் தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாரயணம் செய்வோம்.

**अत्यन्तशीतलम् अनर्गलकर्मपाक**
**काकोलहारि सुलभं सुमनोभिरेतत्।**
**पीयूषमेव तव वीक्षणमम्ब किं तु**
**कामाक्षि नीलमिदमित्यमेव भेदः।। ९९ ।।**

அத்யந்த சீதலம் அனர்கல கர்மபாக
காகோலஹாரி ஸுலபம் ஸுமனோபரேதத்।
பீயூஷமேவ தவ வீக்ஷணமம்ப கிம் து
காமாக்ஷி நீலமித மித்யயமேவ பேத:।।99।।

அன்னையே காமாக்ஷி ! மிகவும் அதிகமான குளிர்ச்சியை உடையதும், தடைப்படாததான இருவினைப் பயனாகிய விஷத்தைப் போக்குவதும் தூயமனம் உடைய நல்லோர்களுக்கு ஸுலபமானதும் இந்த உன் கண்ணோக்கு அமிழ்தமேயாகும். ஆனால் நீல நிறத்தில் இருப்பது ஒன்றுதான் பேதமாகும். (குளிர்ச்சி விஷத்திற்கு மாற்று தேவர்களுக்கு உரியது என்னும் குணங்கள்).

अज्ञातभक्तिरसं अप्रसरद्विवेकम्
अत्यन्तगर्वम् अनधीत समस्तशास्त्रम् ।
अप्राप्तसत्यम् असमीपगतं च मुक्तेः
कामाक्षि नैव तव काङ्क्षति दृष्टिपातः।।९९।।
(कामाक्षि मामवतु ते करुणाकटाक्षः)

कटाक्ष शतकम् ।। १००

காமாக்ஷியே பக்தியே இன்னெதென்று அறியாதவன் பகுத்தறிவின் சுவடே தெரியாதவன், சாஸ்த்ரங்களை ஓதி உணராதவன், சத்யப் பொருளைப் பெறாதவன் மோக்ஷத்தின் அருகே செல்லாதவன் இப்படிப்பட்டவனை உன் கடாக்ஷம் ஒரு போதும் விரும்புவதில்லை. இப்படியிருக்கின்ற என்னை உன் கடாக்ஷம் காக்கட்டும் என்பது பாடாந்தரத்தின் பொருள்.

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்